பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 32வியாழக்கிழமை (16.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 232

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# ஜனநாயகத்தையும் இயல்பு நிலையையும் வடக்கில் ஏற்படுத்த அரசு தவறிவிட்டது

## குற்றம் சுமத்துகிறார் ரணில்



கொழும்பு,ஜூலை 16

வடக்கில் ஜனநாயகத்தையும், இயல்பு வாழ்க்கையையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அந்தப் பகுதி மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடத் தமது கட்சி தீர்மானித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுடர்

உள்ளே

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

நாளை

தரம் 4 மாணவர்களுக்கான பரீட்சை மாதிரி வினாத்தாள்

## முகாம்களில் தங்கியுள்ள மக்களை சர்வதேச நண்பர்களின் ஆதரவுடன் சொந்த இடங்களில் குடியமர்த்துவோம்

### அணிசேரா மாநாட்டில் ஜனாதிபதி

கெய்ரோ,ஜூலை16

சர்வதேச நண்பர் கள் (நாடுகள்)வழங்கும் உதவிகளைக் கொண்டு முகாம்க ளில் தங்கியுள்ள மக் களை விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்துவோம் என்று நம்புகிறோம்.

எகிப்தின் எல். ஷெய்க் நகரில் நடை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கான முகாம்கள் நீண்ட காலத் தீர்வாக அமைய முடியாது

### உறவினர்களுடன் தங்க அனுமதி வேண்டும் என்கிறார் பிரிட்டிஷ் அமைச்சர்

லண்டன், ஜூலை 16

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் நீண்ட காலத் தீர்வாக அமையமுடியாது. 180 நாள்களுக்குள் மக்களை மீளக் குடியேற்றுவது குறித்த உறுதிமொழியை இலங்கை அரசு பின்பற்ற வேண்டுமென பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திய மைச்சர் மைக் பொஸ்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேவைப்பட்டால் அவர்களைத் தமது உறவினர்களுடன் தங்குவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும். இடைக்கால நடவடிக்கையாக இதனைச் செய்யவேண்டும் என்று அமைச்சர் பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு மனிதாபிமானப் பணியாளர்களுக்கு விஸா வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறும் அவர் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டனின் ஒரு கோடி

(16ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி நேரப் போரின்போது பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் வெடிகுண்டுக் காயங்களுக்கு இலக்காகினர்

### எம்.எஸ்.எவ்.அமைப்புத் தகவல்

கொழும்பு, ஜூலை 16

வன்னியில் இறுதிப்போர் நடைபெற்ற போது ஐந்து வயதுக்கும் உட்பட்ட குழந்தைகளே பெரும் எண்ணிக்கையில் வெடிகுண்டுக் காயமுற்றனர். அவர்களுக்கு மனிக்பாம் அகதி முகாம் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மனிக்பாம் அகதி முகாமில் தமது வைத்திய சேவை குறித்து பிரான்ஸின் எம்.எஸ்.எவ். (எல்லைகளற்ற மருத்துவ அமைப்பு) விடுத்த அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டதுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஏனைய தகவல்கள் வருமாறு:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியூடான சொகுசு பஸ் சேவை அடுத்தவார முற்பகுதியில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான, ஏ-9 வீதி ஊடான, சொகுசு பஸ் சேவை அடுத்தவார முற்பகுதியில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது சேவை கொழும்பில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத் தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அமைச்சர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினை குறித்து அரசு கண் விழிக்காவிடின் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

### ஜே.வி.பியின் சோமவன்ஸ எச்சரிக்கிறார்



கொழும்பு, ஜூலை 16

நிமிடத்துக்கு நிமிடம் விஸ்வரூபமெடுத்துக் கொண்டிருக்கும் தமிழர் பிரச்சினை தொடர்பில் அரசிடம் தெளிவான நோக்குக் காணப்படவில்லை.

தேசிய பிரச்சினை விடயத்தில் அரசு கண் விழிக்காத நிலை தொடரும் பட்சத்தில் பிற்காலத்தில் மிக மோசமான விளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## சீனா, பாகிஸ்தானுடன் செய்யப்பட்ட 200மில். டொலர் ஆயுத உடன்படிக்கை ரத்து

### விடுதலைப் புலிகளை வென்றதால் சாத்தியமானது என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 16

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் முடிவுக்கு வந்ததை அடுத்து பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் செய்யப்பட்டிருந்த 200மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தலைமை அதிகாரியான ஜெனரல் சரத்பொன்சேகா இத்தகவலைத் தெரிவித்தார்.

புதிய பதவியை நேற்று பொறுப்பேற்றுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தேர்தல் செயற்பாடுகளுக்கு ஆயுதக் குழுக்களினால் குந்தகமா?

### இல்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 16

வடக்கில் தேர்தல் நடவடிக்கைகளை ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் குழப்புகின்றன எனத் தெரிவிக்கப்படுவது போலியான குற்றச்சாட்டு என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்

(16ஆம் பக்கம் பார்க்க)

ஜீவ ஒளி மிஷன் நடத்தும் மாபெரும்

உயிரூட்டப்பட்ட சரித்திரக் கண்காட்சி 2009

'ஏனென்றால்..... சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது' கொலோசெயர் 1:16

காலம்: 17, 18 ஜூலை நேரம்: மாலை 04 - 09 மணிவரை

இடம்: ஜீவ ஒளிமிஷன் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் (Dr. நடராஜா வைத்தியசாலை அருகாமை) தொ.பே 0602210819, 021 2240322

அன்பளிப்பு 10/=

17.07.2009 மாலை 04 மணிக்கு 'ஜீவ ஒளியின் இடைவிடா இசை' CD வெளியீடும் நடைபெறும்

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஜீவஒளி மிஷன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுஜீவா வைத்தியசாலை
## புதிய கிளை திறப்புவிழா அழைப்பு

24 ஆவது 25 ஆவது அனுராதபுர இராஜவைத்திய பரம்பரை முறைகள், செகராஜசேகர, பரராஜசேகர அரச வைத்திய முறைகள் மற்றும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் போதனை முறைகள் மூலமாக பக்க விளைவற்ற அதிசிறந்த செயல்திறன் மிக்க தெரிந்தெடுக்கப்பட்ட இலங்கை, இந்திய மருந்துகள் மூலமாக விசேடமாக குழந்தையின்மை உட்பட மாற்ற முடியாத நோய்களை நீக்குவதில் பிரசித்திபெற்ற **சுஜீவா வைத்தியசாலை** முன்னர் கனத்தாவ, பாலிநகர், காரைநகர் போன்ற இடங்களிலும் தற்போது கலட்டி அம்மன் வீதி எனும் முகவரியிலும் இயங்கி வருகிறது.

இங்கு சிகிச்சை பெறும் தூர இடங்களைச் சேர்ந்தவர்களின் வசதி கருதி யாழ்.நகர மத்தியில் வண்ணை சிவன் கோயிலுக்கு அருகில் K.K.S வீதியில் புதிய கிளை இன்று (16.07.2009) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Dr.C.Jeyalan**
*DAM R.I.M.P. Regd No.12128*
*Medical offecer in charge.*

## கொழும்பிலிருந்து வருகை தரும் உயிர்த்த ஆண்டவர் இறைதியான குழுவினர் சகோதரன் லலித் பெரேரா தலைமையில் நடத்தும் இறைதியான குணமாக்கல் வழிபாடுகள்



பொதுவான வழிபாடுகள்
*18.07.2009* சனிக்கிழமை மாலை
*4 மணி முதல்* 7 மணி வரை
*19.07.2009* ஞாயிற்றுக் கிழமை
காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை
(ஞாயிறு திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்)

★★★

மறையாசிரியர்கள், பக்திச்சபைகளின் அங்கத்தவர்கள், இறைதியான ஊழியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு
*20.07.2009 திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை*

★★★

குருக்கள், துறவிகளுக்கு
*20.07.2009 திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் பகல் 1 மணி வரை*

★★★

**மேற்படி வழிபாடுகளெல்லாம் இலக்கம் 54, பழைய பூங்கா வீதியிலுள்ள இறைதியான இல்ல மண்டபத்தில் நடைபெறும்.**

★★★

*20.07.2009 திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் 7 மணி வரை பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்திலும் மேற்படி குழுவினரின் குணமாக்கல் வழிபாடுகள் நடைபெறும்.*

இறைவார்த்தையைக் கேட்டு, இறைவல்லமையால் நிறைந்து உடல், உள, ஆன்மீக விடுதலை பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம். இறைதியான குழுவினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் சிறிகரன் அவர்களின் அன்பு மகள்

### சிறிகரன் சங்கவி

15.07.2009 காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி.வடக்கு, தெல்லிப்பழை.

பிரதேச செயலாளரும்
சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்.

## மரண அறிவித்தல்



### சபாபதி வீரசிங்கம்

இராசவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி வீரசிங்கம் நேற்று (15.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சித்திரா, சுரேந்திரன், சுமித்திரா (இந்தியா), கல்பனா (பிரான்ஸ்), றமணேந்திரன், பாலரூபன் (இத்தாலி), பிரதீபா (அவுஸ்திரேலியா), பிரமிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர்களான சிவஞானம், சின்னத்துரை, இரத்தினம், இராசதுரை, பாக்கியம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரஸ்வதி, கைலாசபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் சுவேந்திரன், ஜெயக்குமாரி, கிருபாகரன் (இந்தியா), சிறீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), கஜனி, தர்சினி, மோகனகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் சுயந்தன், சுலக்ஷன், டிலக்ஷன், லக்ஷன், நிக்ஷன், மதுமிகா, இலக்கியா, லக்ஷன், இந்துஜன், றஜினா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2009) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சடலத்தை இனங்காட்டுமாறு பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

சரசாலை வடக்கு, சாவகச்சேரி எனும் முகவரியுடைய சின்னப்பெடி செல்வராசா என்பவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது பிள்ளைகள் யாரும் இருப்பின் இவரது சடலத்தை ஐந்து நாள்களுக்குள் அடையாளம் காட்டி உரிமைகோருமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## ஆங்கில ஆசிரியர்களின் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பகுதிநேர ஆங்கில ஆசிரியர், தேசிய டிப்ளோமா ஆங்கில பட்டதாரிகள் ஆகியோரின் விவரக் கொத்து ஒப்படைக்கும் முகமாக திரட்டப்பட்ட கல்வித்தகைமைச் சான்றிதழ் விவரங்களுடன் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.கல்விப் பணிமனையில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)

## விபத்தில் காயமடைந்த இளைஞன் நான்கு நாள்களின் பின் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த இளைஞன் சிகிச்சை பயனின்றி நான்கு நாள்களின் பின்னர் மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை வீதி வளைவொன்றில் திரும்பிய வேளையில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு அவருக்கு தலையில் காயமேற்பட்டது.

காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த குவேனபாலன் வர்ணராஜா (வயது 17) என்னும் இளைஞரே மரணமானவராவார்.

இவரின் மரணம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை மரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (1-207)

## தென்மராட்சியில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று முதல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் உள்ளூராட்சிவாரத்தையிட்டு மாணவர்களுக்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டியையும் நாளை மறுதினம் சனிக்கிழமை சரசாலை வடக்குப் பகுதியில் நடமாடும் நூலக சேவையையும் 24 ஆம் திகதி ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் இந்து நாகரிக பாட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சையையும் நடத்தவுள்ளதாக நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (1-207)

## பௌதிகவியல் ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சை சனியன்று

யாழ்ப்பாணம், ஜூலை 16

41 ஆவது சர்வதேச பௌதிகவியல் ஒலிப்பியாட், 11 ஆவது ஆசிய பௌதிகவியல் ஒலிப்பியாட் மற்றும் 3 ஆவது தேசிய வானியல், வான் பௌதிகவியல் ஒலிம்பியாட் ஆகிய போட்டிகளுக்கான தெரிவுப்பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12.30 மணி வரை யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை க.பொ.த. உயர்தர வகுப்பில் பௌதிகவியலை ஒரு பாடமாகக் கொண்ட அனைவருக்கும் உகந்த ஒரு முன்னோடிப் பரீட்சையாகும். பௌதிகவியலில் ஆர்வமுள்ள எவரும் பங்குபற்றலாம் என்பதற்காக இம்முறை விண்ணப்பங்களை அதிபரூடாக அனுப்புமாறு கோரப்படவில்லை.

ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் நேரடியாகப் பரீட்சை மண்டபத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு பிறந்த பூராடம்/செவ்வாய் தோஷமற்ற 58 கிரக பாவமுள்ள, அரச உத்தியோகமுள்ள பட்டதாரிப் பெண்ணுக்கு, பட்டதாரி தரத்துக்கு குறையாத அரச உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: 07[illegible]20735

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
13 ★ 10 ★ 1968



அநியாய அழிப்பு
27 ★ 06 ★ 2008

### கந்தசாமி பிரபாகரன்

(உரிமையாளர், டிலக்ஷன் மோட்டோர்ஸ்
உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை)

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பில் உயர்ந்தவராய்
பாசத்திற்கு உறைவிடமாய்
எம்மோடு வாழ்ந்தவரே
உங்கள் நல்வாழ்வை சகிக்காமல்
காலத்தின் சோதனையால்
காலனவன் உங்கள் உயிரை
பறித்தது ஏனோ
காலமெல்லாம் உங்கள் பிரிவால்
தவிக்கின்றோம்.

உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.52/2, வைமன் றோட்,
நல்லூர்.

மனைவி (செல்வராணி),
பிள்ளைகள் - டிலக்ஷன், நிவேதனா.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
19 • 03 • 1935



இறைவன் அடியில்
16 • 07 • 2004

### திருமதி திலகவதி கந்தசாமி

திதி சதுர்த்தசி : 21.07.2009

எம் அன்பின் உறைவிடம் எமை மீளாத்துயரில் ஆழ்த்தி
நான்கு ஆண்டுகள் கடந்தும் உங்கள்
நினைவு எம் நெஞ்சைவிட்டு என்றென்றும் நீங்காது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
கணவர் Dr. K. கந்தசாமி (J.P)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

6/2A, Dr.E.A. Cooray Mawatha,
Wellawatta.

கல்வத்தை,
கரவெட்டி.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நடராசா

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா 14.07.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அழகம்மா தம்பதியினரின் மருமகனும் லோகராணியின் அன்புக் கணவரும் நந்தகுமார், நளினி (பிரதேச செயலகம், வவுனியா), நந்தகோபன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதாவின் (ஆசிரியை, மட்டுவில் மகா வித்தியாலயம்) அன்பு மாமனாரும் தர்சனாவின் அன்புப் பேரனும் பஞ்சாட்சரத்தின் மைத்துனரும் யோகேஸ்வரியின் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) ஒன்றுவிட்ட சகோதரனும் முத்துலிங்கம், அன்னலட்சுமி, விநாயகமூர்த்தி, காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, சவுந்தலாதேவி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2009) வியாழக்கிழமை பி.ப. அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 -தொலைநகல்.: 222 9944

# தமிழர் பிரதேசத்தில் தேர்தல்

வடக்கில் அரசு இன்னமும் ஜனநாயகத்தையும், வழமை நிலையையும் கொண்டுவரவில்லை. ஆனால் அதற்குள் அங்கு தேர்தல் ஒன்றுக்கு அது முந்திக்கொண்டு விட்டது எனக் குற்றம் சுமத்தியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபை ஆகியவற்றுக்கான தேர்தல்களை ஒட்டிய தனது விஞ்ஞாபனத்தை ஐ.தே.கட்சி வெளியிட்டிருக்கின்றது. அதை ஒட்டிய நிகழ்விலேயே இந்தக் குற்றச்சாட்டை எதிர்கட்சித் தலைவர் முன்வைத்திருக்கின்றார்.

வன்னியில் மிக மோசமாக இடம்பெற்ற கோர யுத்தத்தின் அதிர்ச்சி அலைகள் ஓய்வதற்கிடையில் இந்தத் தேர்தல் தமிழர் தாயகம் மீது அவசர அவசரமாகத் திணிக்கப்பட்டிருக்கின்றது.

யுத்தப் பேரழிவும், அந்தப் பேரழிவில் சிக்குண்டு வீடு, வாசல்கள், சொத்துகள், உறவுகள் என்ற இழப்புகளுமாகப் பெரும் துன்பத்தில் தமிழர்களின் தாயகப் பூமி துவண்டு போய்க் கிடக்கின்றது. இந்தத் துயரங்களில் சிக்குண்டு ஏதிலிகளான சுமார் மூன்று லட்சம் மக்கள் வவுனியாவில் இடைத்தங்கல் முகாம்கள் அல்லது இடம்பெயர்ந்தோரின் நலன்புரி மையங்கள் என்று அழைக்கப்படும் இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஒரு வகையில் அவர்கள் திறந்த வெளிச் சிறையில் சிக்குண்டுள்ளனர். முகாம்களை விட்டு வெளியேறவோ, தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பவோ அவர்களுக்கு நாதி இல்லை. அவர்களது வாழ்வியல் நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை. மோசமான மனச் சிதைவுக்குள் சிக்குண்டு ஒரு பெரிய சமுதாயமே அவலப்பட்டுக் கிடக் கின்றது.

இந்த முகாம்களில் சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள், உணவு, குடிதண்ணீர், வாழ்வியலுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்யும் ஒழுங்குகள் என்பன மெல்லமெல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றன என்று கூறப்பட்டாலும் அங்கு சமூக நிலைமை இன்னும் திரும்பவில்லை என்பது யதார்த்தமே.

இந்தப் பாதிப்புகளும், இழப்புகளும் நேரடியாக வன்னியுடன் சம்பந்தப்பட்டவை என்றாலும் அவற்றினால் நேர்ந்த உளவியல் தாக்கங்களும், தொடர்புகளும் வன்னியுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டனவல்ல. அதற்கு அப்பால் முழு இலங்கையிலும் உள்ள தமிழர்களையும், அவர்களையும் தாண்டி புலம் பெயர்ந்த தமிழர்களையும் கூட மோசமாகப் பாதித்து, அவர்களின் உள்ளங்களை ஆட்டிப்படைத்து, சிந்தையை சிதற வைத்திருக்கின்றன அவை என்பதும் நிஜமே.

அதாவது, வன்னி மண்ணில் இந்த ஆண்டு ஆரம்பம் முதல் மே மாதம் மத்தி வரையில் தீவிரம் பெற்றுப் பின்னர் உக்கிரமடைந்த யுத்தத்தின் சீரழிவுகள், முழு இலங்கைத் தமிழர்களின் மனங்களையுமே - தமிழினத்தின் ஆன்மாவையே - ரணகளப்படுத்தி, சிதைத்தழித்து, காயப்படுத்தியிருக்கின்றன. அந்த அசாதாரண சிதைவிலிருந்து தமிழர் தாயகப் பூமி வழமை நிலைக்குத் திரும்புவதற்குக் காலம் செல்லும். அதற்காகப் பல்வேறு பிராயச்சித்த நடவடிக்கைகளையும், நிவாரணச் செயற்பாடுகளையும் விரைந்து செய்யவேண்டியிருக்கும்.

ஆனால், அவற்றுக்கு முன்பதாக விழுந்தடித்து 'மினி' தேர்தல் ஒன்று தமிழர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத விடயம்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டுகின்றமை போல வழமைக்குத் திரும்பாத ஒரு பிரதேசத்தில் இது ஓர் அவசரத் தேர்தல் என்ற குற்றச்சாட்டில் விடயம் உண்டு.

அடுத்தது - இத் தேர்தலை நடத்துவதற்கான ஜனநாயகச் சூழ்நிலை திரும்பவில்லை என்ற குற்றச்சாட்டு.

ஐக்கிய தேசியக் கட்சி, வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற - இத் தேர்தலில் போட்டியிடுகின்ற - பிரதான கட்சி கள் இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.அவை நிராகரிக்கப்படக் கூடியவை அல்ல.

இந்தப் பிரதேசங்களில் இன்னும் ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன என்ற கூற்றின் பின்னணியில் இக்குற்றச்சாட்டுகளில் விடயங்கள், அர்த்தங்கள் பொதிந்திருப்பதை மறுக்க முடியாதுதான்.

எனினும், பலரும் பொதுவாக அஞ்சிய அளவுக்குத் தேர்தல் களத்தில் அச்சுறுத்தல் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிடுவது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றே என்பதுதான் இன்றைய நிலைமை. ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல் தொடர்ந்தாலும் கூட, ஆளும் தரப்பின் அத்துமீறல்கள் நீடித்தாலும் கூட, அவை வழமையாகத் தென்னிலங்கையில் நடைபெறும் தேர்தல்களின் போதான ஜனநாயக விரோதப் போக்கை மீறியனவாக இங்கு இன்னும் தீவிரமடையவில்லை என்பதையும் மறுக்க முடியாதது.

இதுவரை நிலைமை கட்டுக்குள்தான் இருக்கின்றது. கெட்டுச் சீரழிந்து விடவில்லை. இனி, தேர்தல் விவகாரம் சூடுபிடித்து, வாக்களிப்பு நெருங்கும் சமயத்திலும், வாக்களிப்புச் சமயத்திலும் நிலைமை எப்படியிருக்கும் என்பதுதான் கூர்ந்து நோக்கப்பட வேண்டிய அம்சமாக உள்ளது.

இது, வெறும் இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலாக இருந்தாலும் கூட -

அது நடைபெறும் காலமும், அது இடம்பெறும் இடங்களின் கேந்திர முக்கியத்துவமும், இத் தேர்தல் அதற்கு அப்பால் இலங்கைத் தமிழர்களின் எதிர்கால வாழ்வியல் போக்கின் தலைவிதியை நிர்ணயிக்கும் விடயமாக அமையக் கூடியது என்பதும் முக்கியமானதாகும்.

அதனால் இத்தேர்தல் மீதும், அது நடத்தப்படும் முறைமை, சூழல், பின்னணி ஆகியவற்றின் மீதும் சகல தரப்புகளின் கவனமும், சிரத்தையும் அளவுக்கு அதிகமாகவே உண்டு. இவ் விடயங்களில் நேரக்கூடிய சிறிய அசுமாத்தமும் அதிக கூர்மையாக அவதானிக்கப்பட்டு, வலிமையாகப் பிரதிபலிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதனால் இந்தத் தேர்தலில் தமது தரப்பு வெற்றி பெற வேண்டும் என்பதிலும் பார்க்க -

இந்தத் தேர்தலை ஒட்டிய விடயங்களில் அதிக சிரத்தையும், கவனமும் காட்டி, சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டி, அறிவிக்கப்பட்ட தேர்தல் உயர்மட்ட ஜனநாயக விழுமியங்களுக்கு அமைவாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதில் ஆட்சித் தரப்புக் கவனமாக இருக்கவேண்டும்.

வெறும் வாய்ப் பேச்சுக்கு அல்லாமல், உண்மையாகவே - நேர்மையாகவே - நெறிமுறையான ஜனநாயகத் தேர்தல் ஒன்றை அரசு தமிழர் தாயகத்தில் நடத்தி முடிக்குமானால், அதுவே அரசுத் தரப்புக்கு விதந்துரைக்கக்கூடிய வெற்றிதான். அரசுத் தலைமைக்கும்,

# சுவிற்சர்லாந்தில் தஞ்சம் கோருபவர்களில் இலங்கைத் தமிழர் இரண்டாவது இடத்தில்

கொழும்பு, ஜூலை 16

சுவிற்சர்லாந்தில் இந்த வருடத்தின் முதல் ஆறு மாதகாலப்பகுதியில் மட்டும் 8 ஆயிரத்து 400 தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்தனர் எனத் தெரிவித்திருக்கும் அந்த நாட்டு அதிகாரிகள், எரித்திரியாவைச் சேர்ந்தவர்களுக்கு அடுத்ததாக ஈழத் தமிழர்களே அங்கு பெருமளவுக்கு தஞ்சம் கோருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை சுவிற்சர்லாந்தில் இந்த வருடத்தில் பெருமளவுக்கு அதிகரித்திருக்கின்றது எனத் தெரிவித்த சுவிற்சர்லாந்தின் குடிவரவு அலுவலக அதிகாரிகள், தஞ்சம் கோரி வருபவர்களில் இலங்கையில் இருந்து வருபவர்களே இரண்டாவது இடத்தில் இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

2009 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் 8 ஆயிரத்து 400 ஈழத் தமிழர்கள் அடைக்கலம் கோரி விண்ணப்பித்திருந்தனர் எனத் தெரிவித்த அவர்கள், கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது இது 40 வீத அதிகரிப்பாகும் எனவும் சுட்டிக்காட்டினர்.

எரித்திரியாவில் இருந்தே அதிகமான தொகையினர் தஞ்சம் கோரி வருகின்றனர் எனவும் தெரிவித்த அவர்கள், அதற்கு அடுத்ததாக இலங்கையில் இருந்தே பெருமளவிலானோர் வருகின்றனர் எனவும் குறிப்பிட்டனர். நைஜீரியா, ஈராக் மற்றும் சோமாலியா என்பன இதற்கு அடுத்த நிலையில் உள்ளன.

இவ்வாறு தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்களில் 90 வீதத்துக்கும் அதிகமானவை நிராகரிக்கப்படுகின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிறந்த சமூக, சமயப்பணிகளை ஆற்றியமைக்காக 'யாழ் விருது' பெறுகிறார் அரச அதிபர் கே. கணேஷ்

யாழ்ப்பாணம், ஜூலை.16

சிறந்த சமூக, சமயப்பணிகளை ஆற்றியமைக்காக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் 2009ஆம் ஆண்டுக்கான 'யாழ் விருது' வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.



யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு யாழ். அரச அதிபருக்கு இந்த விருதை வழங்குகின்றது.

சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ். மாநகர சபையின் ஆணையாளருமான மு.செ.சரவணபவ தலைமையில் கூடிய மகாசபை 'யாழ் விருது' வழங்குவது தொடர்பாக ஆராய்ந்தது. இந்த விருதுக்குப் பல்வேறு சேவையாளர்களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

நெருக்கடியான சூழலில் சமூக, சமயப்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றியமைக்காக யாழ். அரச அதிபர் கே. கணேஷுக்கு 'யாழ்.விருது' வழங்குவதாக சைவசமய விவகாரக் குழுவின் மகாசபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. சபையினால் வருடா வருடம் வழங்கப்படும் அதி உயர்விருதாக 'யாழ் விருது' விளங்கு கின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள 'நல்லைக் குமரன்' மலர் வெளியீட்டு விழாவின் போது இந்த விருதை அரச அதிபர் கே. கணேஷ் பெற்றுக்கொள்வார்.

கடந்த வருடங்களில் பல சமூக சேவையாளர்கள் இந்த விருதினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50)

## கிராம சேவை அலுவலர்களின் கடமை நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராம சேவையாளர்களின் கடமை நேரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் திங்கள், வியாழன், சனி ஆகிய நாள்கள் அலுவலக நாள்களாக இருந்தன. புதன்கிழமை பிரதேச செயலக பகுதி நாள் கூட்டங்களுக்கு செல்லும் நாளாகவும், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு தினங்களில் ஓய்வுநாள் தவிர்ந்த ஏனைய நாள்கள் வெளிக்கள கடமை நாள்களாகவும் அறிவிக்கப்பட்டிருந்தன.

இந்தமாதம் முதல் வழமைபோன்று திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய நாள்களிலும் ஏனைய நாள்களான செவ்வாய், வெள்ளி தினங்களில் காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணி வரை அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும் எனவும் அதன் பின்னரே வெளிக்கள வேலைகளுக்குச் செல்ல வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் இந்த சுற்றுநிருபம் இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# ஐ.தே.க.செயலர் உட்பட இரு எம்.பிக்கள் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

கொழும்பு, ஜூலை16

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்காவும், ஐ.தே.க உதவிச் செயலாளரும், யாழ்.மாநகர சபை, வவுனியா நகரசபை தேர்தலுக்கான அதிகாரம் பெற்ற பிரதிநிதியுமான நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் இன்று வியாழக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது யாழ். மாநகரசபைத் தேர்தலில் முதன்மை (வேட்பாளராகப் போட்டியிடும்) சத்தியேந்திரா உட்பட்ட பல வேட்பாளர்களை அவர்கள் சந்திக்கவுள்ளனர். நல்லூர் கந்தன் ஆலயத்தில் யாழ். மாநகரசபைத் தேர்தலுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பூஜையொன்றிலும் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் குழாம், மாணவர்கள், யாழ்ப்பாண வியாபார பிரமுகர்கள், சமூக சேவை அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரையும் அவர்கள் சந்திக்கவுள்ளனர்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரம், ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகள் போன்றவை அடங்கிய துண்டுப்பிரசுரங்கள், சஞ்சிகைகள் போன்றனவும் யாழ். மாநகர சபைக்குட்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ். மாநகர சபை, வவுனியா நகர சபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக யாதாயினும் தகவல் தேவைப்படின் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# கிழக்கில் தனது நான்கு அலுவலகங்களை மூடுகிறது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு

கொழும்பு,ஜூலை16

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தனது அலுவலகங்களில் நான்கினை கிழக்குப் பிராந்தியத்தில் மூட விருப்பதாகவும் இங்கு பணிபுரிந்தவர்களில் 148 பேர் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் 10 பேர் வெளிநாட்டவர் என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரஸி விஜேரட்ண கூறியுள்ளார்.

இலங்கையில் தனது நிலைப்பாட்டையும் பணி முக்கியத்துவத்தையும் மீள் ஆய்வு செய்து வருவதாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தென் ஆசிய செயற்பாடுகளுக்குப் பொறுப்பான ஜெக்ஸ்டிமாயோ தெரிவித்தார்.

மோதல்கள் முடிவடைந்துள்ள நிலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிகளைக் குறைத்துக் கொள்ளும்படி அரசாங்கம் கோரியுள்ளது. 1989ஆம் ஆண்டிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இலங்கையில் பணியாற்றி வருகின்றது.

அரசாங்கத்தின் நடவடிக்கை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விரோதமானது என்றோ ஆதரவானது என்றோ கொள்ள முடியாது என்று தெரிவித்தார் சர்வோதய நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் லின்யா அரியரட்ண. ஐ.சி.ஆர்.சி போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள கேட்டிருக்கும் அரசின் செயற்பாட்டை நான் ஆதரிக்கிறேன். ஏனென்றால் போர் முடிவுற்ற சூழ்நிலையில் அவைகளின் பணிகள் மட்டுப்படுத்தப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலும் போர் நடைபெற்ற இடங்களான கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் அலுவலகங்கள் இருந்துள்ளன. இவற்றில் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு அலுவலகங்கள் மூடப்பட்டன. (ப)

# யாழ்.மாநகரசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 335 பேர் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை.16

அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ்.மாநகரசபைத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்க 335 பேர் தகுதிபெற்றுள்ளனர் என்று யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தபால் மூல வாக்களிப்பிற்கு வாக்காளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது 473 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதில் 138 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 335 விண்ணப்பதாரிகள் தபால்மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்களுக்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

தபால் மூல வாக்களிப்பு இம் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-9)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 01 | 17.07.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ. 08.13 வரை |
| நட்சத்திரம்: | பரணி |
| | பி.ப. 12.50 வரை |
| சுபநேரம்: | 06.00 - 07.30 |
| ராகுகாலம்: | 10.30 - 12.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமேற்கு ஈரானில் விமான விபத்து: 150 பேர் பலியாகியிருக்கலாமென அச்சம்

தெஹ்ரான், ஜூலை 16

வட மேற்கு ஈரானில் 150 பேருடன் விமானமொன்று விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இதில் அனைவரும் பலியாகியிருக்கக்கூடுமென அஞ்சப்படுகிறது என ஈரானிய அரச தொலைக்காட்சி நேற்று புதன்கிழமை தெரிவித்தது.

இந்தப் பயணிகள் விமானம், ஈரானிய நகரான காஸ்வின்னுக்கருகில் விபத்துக்குள்ளாகியிருக்கலாமென நம்பப்படுகிறது என ஈரானிய தொலைக்காட்சி மேலும் குறிப்பிட்டது.

''இவ்விமானத்தில் இருந்த அனைவரும் அநேகமாக இறந்திருக்கக்கூடும்'' என காஸ்வின் பொலிஸ் அதிபர் ஹொசின் பெஹ்ஷாட்பூர் தெரிவித்தார் என்றும் மேற்படி தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்தது.

காஸ்வின் நகருக்கருகிலுள்ள ஜனாட் - அபேட் கிராமத்துக்கருகில் இவ்விமான விபத்து சம்பவித்துள்ளது. காஸ்வின் மாகாணத்தின் மிகப்பெரிய நகராகவும், தலைநகராகவும் காஸ்வின் திகழ்கிறது.

இதன் மக்கள் தொகை 3 இலட்சத்து 30 ஆயிரம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஈரானின் தலைநகரான தெஹ்ரானின் வட மேற்கே, ஏறத்தாழ 140 கிலோ மீற்றர் (90 மைல்) [illegible]லவில் இது அமைந்துள்ளது.

# இந்தியாவிடம் பாகிஸ்தான் புதிய ஆதாரம் கையளிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 16

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக புதிய தகவல் தொகுப்பு ஒன்றை பாகிஸ்தான் அரசு இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது. எகிப்தில் நடைபெறும் அணிசேரா நாடுகள் உச்சிமாநாட்டின் போது, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியும் பேச்சுகள் நடத்தவுள்ளார்கள்.

இந்நிலையில், பாகிஸ்தான் அரசு இந்த ஆதாரங்களின் தொகுப்பை இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் கையளித்துள்ளது.

இந்தக் கோப்பில் 13 புதிய குற்றவாளிகள் பற்றி பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. இதுவரை நடத்தப்பட்ட விசாரணை விவரங்களையும் அது குறிப்பிட்டுள்ளது என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, திறந்த மனதுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் தாம் பேச்சு நடத்தவுள்ளார் என பாகிஸ் தான் பிரதமர் கிலானி இஸ்லாமாபாத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையே தடைபட்டிருக்கும் அமைதி முயற்சியை மீண்டும் தொடங்கும் நடவடிக்கையாக மன்மோகன் சிங்குடன் தாம் பேசவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளும் சரியான திசையில் முன்னேறி வருகின்றன. ஆனால், மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் இந்த முயற்சியில் இடைவெளியை ஏற்படுத்தி விட்டது. இதனால் தீவிரவாதிகளுக்குதான் நன்மை ஏற்பட்டுள்ளது என்றும் கிலானி குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சு பயன் உள்ளவையாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# ஆங்சான் சூகியை விடுவிக்க அமெ., பிரிட்டன் வலியுறுத்தல்

வாஷிங்ரன், ஜூலை 16

மியான்மரில் சிறையில் வாடும் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகியை இராணுவ அரசு விடுவிக்க வேண்டும் என அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

அண்மையில் மியான்மர் விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூன், 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தனது மியான்மர் விஜயம் குறித்து திங்கட்கிழமை விளக்கினார்.

அமெரிக்கப் பிரதிநிதி ரோஸ்மேரி ஏ.டி கார்லோ இதில் பேசுகையில், '' 2010 இல் மியான்மரில் நடைபெறும் தேர்தல் சுகந்திரமாகவும், நேர்மையாகவும் நடக்கும் என இராணுவ அரசு தொடர்ந்து உறுதி கூறி வருகிறது. அதேவேளை, ஆங்சான் சூகியை எவ்வித நிபந்தனையுமின்றி அது உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்'' என்றார்.

பிரிட்டிஷ் பிரதிநிதி பிலிப் பர்ஹாம் பேசுகையில், ''தேர்தல்களில் ஆங்சான் சூகி பங்கேற்க முடியாதவாறு தடுக்கப்பட்டால், அரசு நடத்தும் தேர்தல்களில் நம்பகத்தன்மை இல்லாமற் போய்விடும். இதை இராணுவ அரசு புரிந்துகொள்ள வேண்டும். பான் கீ-மூனின் பயணத்தை ஆக்கப் பூர்வமாகப் பயன்படுத்தாவிட்டால் அந்நாடு மேலும் தனிமைப்படுத்தப் படும்'' என்றார்.

பிரான்ஸ் பிரதிநிதி ஜீன்-மொறிஸ் ரிபெர்ட் பேசுகையில்,''பாதுகாப்புச் சபையின் கோரிக்கைகளை மியான்மர் அரசு நிறைவேற்றாதது மட்டுமல்ல, அவற்றிற்கு நேர் எதிரான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது'' என்றார்.

# பாக். ராவல்பிண்டியில் ஐ.நா குழுவினர் ஆய்வு

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்ட பகுதியில் ஐ.நா. தொழில்நுட்ப ஆய்வுக் குழுவினர் திங்கட்கிழமை முன்னோடி ஆய்வை மேற்கொண்டனர்.

2007 ஆம் ஆண்டு டிசெம்பர் 27 ஆம் திகதி, தேர்தல் பிரசாரத்தைத் தாம் முடித்துக் கொண்டு பெனாஸிர் பூட்டோ திரும்பி வரும்போது ராவல்பிண்டியில் படுகொலை செய்யப்பட்டார்.

இக் கொலை தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கு விசாரணை ஆணைக் குழுவொன்றை ஐ.நா.நிறுவியுள்ளது. இக் குழு உறுப்பினர்கள் விரைவில் பாகிஸ்தான் வரவுள்ளனர். இவ்வருகைக்கு முன்னர் ஐ.நா.தொழில்நுட்ப ஆய்வுக் குழுவினர் பெனாஸிர் கொலையுண்ட பகுதியில் முன்னோடி ஆய்வினை மேற்கொண்டனர்.

ஐ.நா. தொழில்நுட்ப ஆய்வுக்குழுவினருடன் பயங்கரவாத எதிர்ப்புப் படையினரும் இஸ்லாமாபாத் பொலிஸாரும் உடன் சென்றிருந்தனர்.

# பண ஆசை காட்டியே ஜக்ஸனை கொன்றுள்ளனர்

## தொலைக்காட்சிபேட்டியில் தந்தை

பண ஆசை காட்டி தனது மகன் மைக்கல் ஜக்ஸனை திட்டமிட்டுக் கொன்று விட்டனர் என அவரது தந்தை ஜோசப் ஜக்ஸன், தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றிற்கு தாம் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''மைக்கல் ஜக்ஸன் லண்டனில் 50 இசை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளார் என்ற அறிவிப்பு வெளியானது. இது எனக்கு அதிர்ச்சி அளித்தது. ஓய்வே இல்லாமல் எப்படி, இப்படி 50 இ[illegible]சை நிகழ்ச்சிகளை ஜக்ஸனால் நடத்த முடி[illegible]ம் என வியப்படைந்தேன்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இது குறித்து நான் விசாரித்தேன். [illegible] இசை நிகழ்ச்சிகளை நடத்த மட்டுமே ஜக்ஸன் ஒப்புக் கொண்டார். சிலர் பண ஆசை காரணமாக 10 இசை நிகழ்ச்சிகளை 50 நிகழ்ச்சிகளாக மாற்றிவிட்டனர் என்ற தகவல் கிட்டியது. கடைசியில் பண ஆசை காட்டியே ஜக்ஸனை கொன்று விட்டனர்'' என்றும் ஜோஸப் ஜக்ஸன் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானில் பிரி. படையினரின் சேவை மிகவும் அவசியம்

## தொலைக்காட்சி பேட்டியில் ஒபாமா

வாஷிங்ரன், ஜூலை 16

தீவிரவாதிகள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் நடமாடும் நாடுகளாக ஆப்கானிஸ்தானோ, பாகிஸ்தானோ இருக்க அனுமதிக்கப்பட மாட்டாதென அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஸ்கை தொலைக்காட்சிக்கு தாம் வழங்கியுள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்காவில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப் படுவதற்கான ஆபத்து உண்டு. இந்த ஆபத்துக்கான வாய்ப்பு லண்டனில் அதிகமாகக்கூட இருக்கலாம். இது விடயத்தில் எம்மால் அசிரத்தையாக இருந்துவிட முடியாது'' என்றும் அவர் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

''ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் படையினர் அதி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் இந்தப் பணி, மேற்குலக நாடுகளில் அல்-குவைதா தாக்குதல்களைத் தடுப்பதற்கு மிகவும் அவசியமாகும்'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை, சமீப வாரங்களாக ஆப்கானிஸ்தானில் பலியாகும் பிரிட்டிஷ் சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் ஆப்கானிஸ்தானில் பிரிட்டிஷ் படைகள் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையின் இலட்சியம், அது செயற்படும் விதம் ஆகியவை தொடர்பாக, பிரிட்டனில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், பிரிட்டிஷ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கருத்து வெளியிட்டுள்ளார் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## மின்பிறப்பாக்கிகளின் முழுமையான சுத்திகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை வழங்கலுக்காக கூறுவிலை கோரல்

*மேற்படி விடயமாக பின்வரும் இடங்களில் உள்ள மின்பிறப்பாக்கிகளின் சுத்திகரிப்பு வேலைத்திட்டங்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தகுதி வாய்ந்த பெறுகைதாரரிடமிருந்து பெறுகைகள் கோரப்படுகின்றன. 27.07.2009 திங்கட்கிழமை மு.ப. 10 மணி வரை பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ் உள்ள அட்டவணையில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.*

| நிறுவனம் | கொள்ளளவு (Capacity) | வேலை விவரம் |
|---|---|---|
| ஆ.வை.பருத்தித்துறை | 40 KVA | முழுமையான சுத்திகரிப்பு |
| ஆ.வை.பருத்தித்துறை | 60 KVA | சுத்திகரிப்பு |
| ஆ.வை.தெல்லிப்பழை | 100 KVA | சுத்திகரிப்பு |
| ஆ.வை.தெல்லிப்பழை | 12.5 KVA | சுத்திகரிப்பு |
| ஆ.வை.சாவகச்சேரி | 30 KVA | சுத்திகரிப்பு |
| ஆ.வை.ஊர்காவற்றுறை | 37.5 KVA | சுத்திகரிப்பு |
| ஆ.வை.ஊர்காவற்றுறை | 6 KVA | சுத்திகரிப்பு |
| பி.வை.நெடுந்தீவு | 6 KVA | சுத்திகரிப்பு |
| பி.வை.கொடிகாமம் | 6.5 KVA | சுத்திகரிப்பு |
| பி.வை.கோப்பாய் | 20 KVA | முழுமையான சுத்திகரிப்பு |
| பி.வை.அச்சுவேலி | 6.5 KVA | சுத்திகரிப்பு |
| பி.வை.சங்கானை | 37.5 KVA | சுத்திகரிப்பு |
| பி.வை.வேலணை | 6.5 KVA | முழுமையான சுத்திகரிப்பு |
| பி.வை.கோண்டாவில் | 6.5 KVA | சுத்திகரிப்பு |
| பி.வை.பண்டத்தரிப்பு | 6 KVA | சுத்திகரிப்பு |
| பிராந்திய பயிற்சி நிலையம் பண்ணை | 5.6 KVA | முழுமையான சுத்திகரிப்பு |
| பி.வை.கோப்பாய் | 6 KVA | முழுமையான சுத்திகரிப்பு |

*மின்பிறப்பாக்கிகளை பார்வையிட விரும்பினால் மேற்குறித்த வைத்தியசாலைகளில் பார்வையிடலாம். அத்துடன் இவை தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற எமது பணிமனையின் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.*

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

[illegible]

# மரண அறிவித்தல்

## திருமதி தில்லையம்பலம் இரத்தினேஸ்வரி



தாவளை இயற்றாலை, மந்துவில், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் இரத்தினேஸ்வரி கடந்த(12.07.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் அமரர்களான சின்னத்தம்பி- கனகம்மா தம்பதியரின் மகளும் அமரர்களான சுப்பிரமணியம்- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் அமரர் நல்லம்மா மற்றும் குலமணி, இராஜேஸ்வரி, முருகமூர்த்தி, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரணி அம்பாள் வெல்டிங் வேக்ஸ் முன்னாள் உரிமையாளர்களான விஜயரட்ணம் (நீர்வேலி), விஜயகுமார் (எருவன்) மற்றும் ரதி (மந்துவில் ), மனோகரன் (பிரான்ஸ்), தியாகராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தி (நீர்வேலி), நாகேஸ்வரி (எருவன்), சிவசுப்பிரமணியம் (தச்சன் தோப்பு), அற்புதராணி (பிரான்ஸ்), லோகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீவன் (சுவிஸ்), சஞ்ஜீபன் (கனடா), சுஜீபன் (கொழும்பு), நிருபன் (O/L அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி), பிரதீபன் (றோ.க.த.க. பாடசாலை,நீர்வேலி), வினோபன் (காமாட்சி அம்பாள் முன்பள்ளி, நீர்வேலி), ஜீவதாஸ், ஜீவநேசன் (வரணி மகாவித்தியாலயம்), மாதுஜா (கணபதிப்பிள்ளை வித்தியாலயம்), அனோசன், அக்சன், அபிலன், அகிசன் (பிரான்ஸ்), தனுஷ், தைஜீனா, தயூரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மறவாத அப்பம்மாவும், வைஸ்ணவியின் (யா/அ/மி/த/கலவன் பாடசாலை) அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2009) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சகாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை இயற்றாலை,
மந்துவில்,கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள உறவுகளுக்கு உதவும் பொருட்டு இந்து அமைப்புக்கள் ஒன்றியத்திடம் நிதி உதவிகள் வழங்கப்பட்டபோது எடுத்த படங்கள் இவை.

தெல்லிப்பழைக் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர் சார்பாகவும், கந்தர்மடம் ஜே/103 வடகிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாகவும், கோண்டாவில் ஆசிமடம் அரசடி விநாயகர் ஆலயம் சார்பாகவும் அருள்மிகு வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயம் சார்பாகவும் அவற்றின் பிரதிநிதிகள் நல்லை ஆதீன முதல்வரிடம் தமது உதவிகளை வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

## வேலைக்கான உணவுத் திட்டப் பணியில் ஈடுபட்டிருந்த பெண் மயங்கி வீழ்ந்தார்

நவாலி, ஜூலை 16

வேலைக்கான உணவுத் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் வேலை செய்து கொண்டிருந்த பெண் மயங்கி வீழ்ந்ததினால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 40 வயதுடைய இப்பெண்ணின் கணவர் நோய் வாய்ப்பட்டவர். 5 பிள்ளைகளுக்குத் தாயான இவர் குடும்ப கஷ்டம் காரணமாக இத்திட்டத்தில் இணைந்து வேலை செய்து கொண்டிருந்தார். இதன்போது திடீரென அவர் மயங்கி விழுந்ததையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-100)

## கொக்குவில் மேற்கில் அதிகாலை வேளை வீட்டுக்குள் புகுந்த திருடர் அட்டகாசம்

### மூவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொக்குவில் மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று அதிகாலை புகுந்த திருடர் கோஷ்டி அங்கிருந்தவர்களை வெட்டியும் கொட்டன்களால் தாக்கியும் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த எஸ். சச்சிதானந்தசிவம் (வயது 54), அவரது மனைவி ச.சந்திரகுமாரி (வயது 49), மகள் ச.சிந்துஜா (வயது 20) ஆகிய மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் சந்திரகுமாரி படுகாயமடைந்துள்ளதாகவும், இவர்கள் போட்ட சத்தத்தினால் திருடர் குழு ஓடி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-78)

## அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியடைய மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்

### யாழ்.அரச அதிபர் உரை

சண்டிலிப்பாய், ஜூலை 16

நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமானால் மக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியமாகும்.

மக்களின் ஒத்துழைப்பில்லாத பயிற்சி நெறிகளோ, அபிவிருத்தித் திட்டங்களோ எதிர்பார்த்த பலனைத் தரமாட்டா.

எனவே கிராமங்கள் தோறும் ஆரம்பிக்கப்படும், ஆரம்பிக்கப்படவிருக்கும் பயிற்சி நெறிகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பூரண ஒத்துழைப்பும், ஊக்கமும் வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரான்பற்றுக் கிராமத்தில் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை அமைப்பின் நிதியுதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது கூறினார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். கனேடிய உலகப் பல்

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

கலைக் கழக சேவை அமைப்பின் வெளிக்களப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் பயிற்சி நிலையத்தின் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:

உயர் கல்வியை பெற முடியாத வசதி குறைந்த இளம் சமுதாயத்திற்கு இது போன்ற பயிற்சி நிலையங்கள் வரப்பிரசாதமாக அமையும்.

பல தொழில் நுட்பங்களைக் கண்டுபிடித்து நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய முடியும்.

இளைஞர்களை நல்வழிப்படுத்துவதன் மூலம் தான் நாட்டில் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு சூழ்நிலைக்கேற்றவாறு இளம் சமுதாயத்தினருக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும்.

இளைஞர்கள் எதிர்காலத்தில் சொந்தக் காலில் நிற்கும் வகையில் தொழிற்பயிற்சிகள் அமைய வேண்டும். பொறுப்புக்களை நாங்கள் தட்டிக் கழிக்க முடியாது.

'வடக்கின் வசந்தம்' மூலம் மக்கள் பயன்பெறக் கூடிய பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன - என்றார். (203-115)

## தென்மராட்சி அதிபர், ஆசிரியர்களுக்கு இன்று முதல் மூன்றுநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16

தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான செயலமர்வுகள் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அவசர நிலைமைகளுக்கு ஆயத்தப்படுத்துவதற்கு பொறுப்பு வகிக்கும் திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறைச் செயலமர்வுகள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து அதிபர்களும் இரண்டு ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை, கைதடி நவில்ட் பாடசாலை ஆகிய 15 பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களைச் செயலமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## தரைவழியூடான பொருள்கள் யாழ்.ப.நோ.கூ.சங்கங்களின் கிளைகளுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தரைப்பாதையூடாக மேலும் ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

பாரவூர்தி மூலம் கொண்டு வரப்பட்ட இந்தப் பொருள்கள் உடனடியாக இறக்கப்பட்டு சங்கக் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

சர்க்கரை,அவல்,மஞ்சள் மைசூர்பருப்பு, செத்தல் மிளகாய், மல்லி, பூடு, சோம்பு, நற்சீரகம் உட்பட மற்றும் பல பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேசமயம் அடுத்துவரும் பாரவூர்தி மூலம் சீனி உட்பட மற்றும் பல பொருள்களைச் சங்கம் எடுத்து வருவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (203- 224)

## பிரதேச ரீதியாக மக்களது பிரச்சினைகளை தீர்த்துவைக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை16

குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச மக்களின் பிரச்சினைகளையும் பிரதேச வாரியாகத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.



வசதியற்ற குடும்பங்களை மேம்படுத்தும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச மக்களுக்கு உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தினமும் தன்னைச் சந்தித்து தங்களது தேவைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் தனது யாழ்.அலுவலகம் நோக்கி வருகின்றனர்.

தூர இடங்களில் இருந்து வரும் மக்களது வசதி கருதியும் அம்மக்களது பிரச்சினைகளை இனங்கண்டு உடனடியாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு வசதியாகவும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் விஜயம் செய்து அங்கிருந்து செயற்படுவது மக்களுக்கு நல்ல பயனைத் தரும் எனக் கருதுகிறேன்.

குடாநாட்டில் பிரதேச செயலகப் பிரிவுகள் வாயிலாக உரிய அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இந்த விஜயம் வசதியாக இருக்கும்.

ஒவ்வொரு பகுதிகளுக்கும் நேரில் விஜயம் செய்து அந்தந்தப் பகுதிகளைப் பார்வையிடவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (203)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஜூலை 16

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய 1008 சங்காபிஷேக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை சுவாமி வீதியுலா வருவார். (204-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

பருத்தித்துறை புலோலி மத்தி அவ்வொல்லைப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் (வேள்வி) நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான விசேட பூசைகள், கிரியைகள் என்பன நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (201-78)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சாமுண்டி சமேத சிவஞான வைரவர் ஆலயத்தின் பரணித் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மு.ப. 10.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறும். (201-78)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை ஆடிப் பூரத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201-78)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் உள்ள காளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்காரப் பெருந்திருவிழா கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பொங்கல்விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

வவுனியா கோவில்குளம் அகிலாண்டேசுரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் [illegible] திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி, புலோலி விவசாயத் திணைக்களத்திற்கு உட்பட்ட பிரிவு மக்களுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கலும் பயிற்சி வழங்கலும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும் புலோலி பெரும்பாக அலுவலர் எஸ்.உருத்திரேஸ்வரன் விவசாயி ஒருவருக்கு விவசாய உள்ளீடுகள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (253)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ சிவா நகைமாளிகை நகை..

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## உப்பள ஊழியர்களுக்கான அறிவித்தல்

லங்கா சோல்ட் நிறுவனத்தில் பணி புரிந்த நிரந்தரப் பணியாளர்கள் "B" படிவம் (EPF) பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதால் ஜூலை மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் 321, A.V.றோட், அரியாலையில் உள்ள எமது அலுவலகத்தில் வந்து படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.

மாந்தை உப்பு லிமிடெட்,
யாழ்ப்பாணம். (சி/559556)

ப.ஸ்ரீகாந்தன்,
உற்பத்தி முகாமையாளர்.

சிவமயம்

## ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
## இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

காலம்: 17.07.2009 வெள்ளிக்கிழமை
காலம்: 18.07.2009 சனிக்கிழமை
காலை- 6.00 மணி அபிஷேகம்
காலை- 9.00 மணி லட்சார்ச்சனை ஆரம்பம்

*19.07.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சங்காபிஷேகம் நடைபெறும்.*

மூன்று தினங்களிலும் அன்னதானம் இடம்பெறும்.

தியாக கெங்காதரக்குருக்கள் தலைமையில் அர்ச்சனை நடைபெறும்.

ஆசியுரை வழங்குபவர்: தா.மகாதேவக்குருக்கள்.

(87054) தேவஸ்தானம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 08 . 10 . 1928

மறைவு 16 . 06 . 2009

### திருமதி காசிப்பிள்ளை பரமேஸ்வரி

அன்பே உருவாய், பாசத்தின் உறைவிடமாய்
எமை அன்போடு பெற்றெடுத்து வளர்த்த
எங்கள் அன்புத் தெய்வத்தை
என்றுமே நாம் மறவோம்.

*எமது அன்புத் தெய்வத்தின்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய். (87023)

குடும்பத்தினர்.

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை16

யாழ்.சிவானந்த மகரிஷி யோக நிலையத்தின் ஏற்பாட்டில் யோகாசன வகுப்புகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கந்தர்மடம் வேதாந்தமட தியான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் வயது வேறுபாடின்றி ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும். அன்றைய தினத்தில் பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிகளில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

* * * *

யாழ்ப்பாணம், ஜூலை16

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும், தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவ சுகாதாரக் குழுக்களும் இணைந்து போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சியினை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கண்காட்சி நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி சுகாதாரக் குழுவின் தலைவர் செல்வி ஜெயவிஜிர்தா புஷ்பாகரன் தலைமையில் நடைபெறும் கண்காட்சிக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தனும் கலந்துகொள்வர். (201-207)

* * * *

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் ஏற்பாட்டில் போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமாகியது.

இன்று வியாழக்கிழமையும் இக்கண்காட்சி நடைபெறும். (201)

* * * *

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பட்டின உப அலுவலகத்தினூடாக உள்ளூராட்சி தொடர்பான நடமாடும் சேவையும் இலவச மருத்துவ முகாமும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை அரசடி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக மானிப்பாய் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டினேஸ் ஜெயக்குமாரும், சிறப்பு விருந்தினராகப் பண்டத்தரிப்பு கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.சிவராசாவும் கலந்து கொள்வர். (201)

* * * *

யாழ்.முகாமையாளர் சங்கத்தால் நடத்தப்படும் சிறுகைத்தொழில் கடன் பற்றிய செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப் பீட பேராசிரியர் எம் நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் வரவேற்புரையை இலங்கை வங்கியின் யாழ்.கிளை உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணமும் சிறப்புரையை யாழ்.விவசாயத் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் கே.சிவகுமார், யாழ்.மாவட்டச் செயலக மீள் எழுச்சி பிரதித் திட்ட இயக்குநர் வி. விஸ்வலிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

சிறுகைத்தொழில் கடன் தொடர்பான கருத்துரையை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்திப் பணிப்பாளர் டபிள்யூ.கருணாரட்ண வழங்குவார். (201)

* * * *

யாழ்ப்பாணம், ஜூலை16

சாவகச்சேரி நகரசபையின் இவ்வருட உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''நகரணி'' சஞ்சிகை வெளியீடும் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (201-207)

* * * *

யாழ்ப்பாணம், ஜூலை16

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகின் ஏற்பாட்டில் தரம் 9 மாணவர்களுக்கான ஆங்கிலப் பாசறை நாளை [illegible] யாழ்.கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 17 பாடசாலைகளைச் சேர்ந்த 68 மாணவர்கள் இந்தப் பாசறையில் கலந்து கொள்ளவுள்ளனர். பாடல்கள், மொழி விளையாட்டு, ஆக்கத்திறன், கதை சொல்லல் போன்ற பல விருத்திச் செயற்பாடுகள் ஊடாக இப்பாசறை நடைபெறவுள்ளது. (201)

* * * *

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் தொழில்நுட்ப அலுவலர்கள், உதவியாளர்களுக்கான ''நிர்மாணத்துறை முகாமை'' என்னும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறை இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நாளை வெள்ளிக்கிழமைவரை நடைபெறும்.

கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் பயிற்சிப் பட்டறையில் வளவாளராகப் பொறியியலாளர் சி.உருத்திரலிங்கம் கலந்து கொள்வார். (201)

* * * *

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இலவச மருத்துவசேவை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அனைத்து நோய்களுக்கும் ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படுவதோடு நீரிழிவு நோய்க்கான இரத்தப் பரிசோதனையும் இடம்பெறும்.(204)

* * * *

யாழ்ப்பாணம், ஜூலை16

கரித்தாஸ்-கியுடெக் நிறுவன அனுசரணையுடன் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தையல் தொழில் நிலைய ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அராலி செட்டியார் மடத்தில் நடைபெறவுள்ளது.

வட பிரதேச நல்லெழுக்க சம்மேளனத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கரித்தாஸ்-கியுடெக் நிறுவன இயக்குநர் வண.பிதா கி.யோ.ஜெயக்குமார் பிரதம விருந்தினராகவும், சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு சிறப்பு விருந்தினராகவும், சுழிபுரம் பிரதேசசபைச் செயலாளர் சி.புத்திசிகாமணி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

* * * *

யாழ்ப்பாணம், ஜூலை16

யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாசன் தலைமையில் போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 23 ★ 04 ★ 1942

இறைவன் அடியில் 16 ★ 07 ★ 2008

### திருமதி மேரி திரேசா ஜோஜீனா விமலதாஸ்

(இளைப்பாறிய உப அதிபர், யாழ்.கன்னியர்மடம் மகா் வித்தியாலயம்)

**எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்
உடலில் உயிர் உள்ளவரை
மறந்திடுமா உங்கள் நினைவு.**

அவரின் ஆன்ம சாந்திக்காக அடைக்கல மாதா ஆலயத்தில் (O.L.R) இன்று (16.07.2009) வியாழக்கிழமை காலை 6 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்......

கணவர், பிள்ளைகள், சகோதரன், சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாக் கலையும் அதன் விளைவுகளும்

சி.தர்ஷிகா, சண்டிலிப்பாய்?? 

நவீன விஞ்ஞான யுகத்தில் தற்காலம் முன்னேறிக் கொண்டே செல்கிறது. ஆனால் பின்னோக்கியும் மனிதனை அழைத்துச் செல்கிறது. விண்ணுலகத்தில் காலடி வைத்த மனிதன் விண்ணுலகை ஆராய்கின்றான். எனினும் மண்ணுலகை மண்ணுலகத்திற்கே கொண்டு செல்கின்றான். மனிதனைத் தீய வழியில் நடத்துவது சினிமாக்கலை ஆகும். எந்தவொரு வீட்டின் வாசலிலும் வண்ண வண்ணப் படங்களும் வரி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. அது வேறு எதுவுமல்ல. இன்று இந்த சினிமாப் படம் திரையில் காண்பிக்கப்படுகின்றது என்ற விளம்பரம்தான். தற்காலத்தில் எமது தயாரிப்பாளர்கள் பெரும் ஆபாச வழிகளில் இயங்குகின்றார்கள். அத்திரைப்படங்கள் மனிதனால் செய்யமுடியாத செயலைச் சித்தரித்துக் காட்டுகின்றன. அதனைப் போல தாமும் செய்ய வேண்டும் என்ற அவாக் கொண்ட சில சிறார்கள் பல துன்பங்களைச் சந்திக்கின்றனர். நடிகர், நடிகைகளோ தமது புகழை நிலை நாட்டுவதற்காக எவ்வாறாயினும் நடிக்க விரும்புகின்றார்கள்.

இச்சினிமாக்கலை சிறார்களின் கல்வியைப் பெரிதும் பாதிக்கின்றது. அவர்கள் தம் இலட்சிய நோக்கை மெல்ல விட்டகன்று சினிமாப் பிரியர்களாக மாற முற்படுகின்றார்கள். சினிமாக்கலை பொழுது போக்காகவே உருவாக்கப்படுகின்றது. இச்சினிமாக் கலையினூடாக மக்களின் அறிவைத் தூண்டக்கூடிய திரைப்படங்களை வெளியிடுதல் சாலச் சிறந்ததாகும். முன்னைய காலங்களில் வெளியாகிய திரைப்படங்கள் சமயம் சார்பாகவே வெளிவந்தன. அவை மாணவர்களின் அறிவை வளர்க்கும் சுடராகவே காணப்பட்டன. ஆனால் தற்காலத் திரைப்படங்களின் ஆபாசக் காட்சிகள் மாணவர்களின் அறிவை வளர்க்கும் சுடரை மங்கச் செய்கின்றன.

## என் KNC உறவுகள் எங்கே?

என் உறவுகளின் பிரிவின் தவர்வோடு - நான்
என் KNC உறவுகள் நினைவோடு
என்னைச் சுற்றி நீங்கள் விட்டுப்போன கேள்விகள்
என் உறவுகள் இல்லாத வெற்று
நிமிடங்களைச் சுமந்து கொண்டு
சூரிய வெளியில் உணர்வுகள் இன்றி
அன்புக்காக உள்ளம் ஏங்கி அழுது கரைகிறது.

(என்னைப் பிரிந்து வாழும் KNC
உறவுகள் எங்கிருந்தாலும்
உதயன் நாளிதழின்
'இளவல்கள் வட்டம்'
பகுதியூடாகத்
தொடர்புகொள்ளவும்)

டே.அமலா,
அல்லாரை நலன்புரி நிலையம்,
யாழ்ப்பாணம்.

# உங்கள் நினைவாற்றலை அதிகரிக்கமுடியும்

ஜீ.ஜீவனா



நினைவாற்றல் நித்தம் நித்தம் உலகை விரிவாக்கிறது. அது இல்லையேல் நம் வாழ்க்கை ஒரு தொடர் கதையாய் இராது. 'எனக்கு மறதி கூட' என்று நம்மில் அநேகர் குறைபட்டுக்கொள்கிறோம். மனிதமூளை பரிபூரணமாக இல்லாவிட்டாலும் கற்றுக் கொள்வதற்கும் நினைவில் வைப்பதற்கும் அதற்கு அபாரத்திறன் இருக்கிறது. எனவே நம்மிடம் இருக்கின்ற இத்திறமையை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நினைவாற்றலை அதிகரிக்க நினைவாற்றலில் 3 படிகள் அடங்கியுள்ளன. தகவலை உருவகப்படுத்துவது, அதைத் தக்க வைத்துக் கொள்வது, அதை மீண்டும் நினைவுக்கு கொண்டு வருவது. தகவலை உங்கள் மூளை அறிந்து புரிந்துகொள்ளும் போது அதை உருவகப்படுத்துகிறது. பின்பு நினைவுக்குக் கொண்டு வருவதற்காக இந்தத் தகவலைத் தக்கவைத்து கொள்கிறது. இந்த 3 படிகளில் ஏதாவது ஒன்றில் கோளாறு ஏற்படும்போதுதான் நம் அனைவருக்கும் மறதி உண்டாகிறது. இந்த நினைவாற்றலில் பல்வேறு வகைகள் உள்ளன. புலன் சார்ந்த நினைவாற்றல், நீண்டகால நினைவாற்றல் ஆகியவை. அவற்றில் சில புலன்சார்ந்த நினைவாற்றலுக்கு முகர்தல், பார்த்தல், தொடுதல் போன்ற புலன் உணர்வுகள் வாயிலாகத் தகவல்கள் கிடைக்கின்றன. குறுகியகால நினைவாற்றல் குறுகிய காலத்திற்கு சிறு சிறு தகவல்களைப் பதிய வைத்துக்கொள்கிறது. இதனால் மனதிலேயே கணக்குப் போட முடிகிறது. ஒரு தொலைபேசி எண்ணை டயல் செய்யும் வரை ஞாபகத்தில் வைக்கமுடிகிறது. அதேபோல் ஒரு வாக்கியத்தின் பிற்பகுதியை வாசிக்கும்போது அல்லது கேட்கும் போது அதன் முதல்ப் பகுதியை நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது. ஆனால் குறுகிய கால நினைவாற்றலுக்கு சில வரம்புகள் இருப்பது நமக்குத் தெரிந்ததே.

ஒரு தகவல் என்றென்றும் நினைவில் இருப்பதற்கு அது உங்களுடைய நீண்ட கால நினைவாற்றலுக்கு செல்லவேண்டும். ஆனால் அதை எப்படி எங்கே அனுப்புவீர்கள்.

[தொடரும்...]

## படிப்புச் சுமையல்ல



தேர்வு காலம் வந்தாச்சு
திறமை காட்ட வாருங்கள்
தேர்வு காலம் என்றாலே
திறமை காட்டும் காலம் தான்
படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில்லாமல் ஊர் சுற்றும்
விடலைக் கூட்டம் சேராமல்
வெற்றி காணப்படித்திடுவோம்
நமக்கு முன்னே உயர்ந்தோரும்
நம்மைப் போல படித்தோரே
சுமையாய் படிப்பை எண்ணாமல்
சுவையாய் அதனை ஏற்போமே
அம்மா அப்பா நினைவெல்லாம்
அருமை செல்வம் நம்முடைய
செம்மையான எதிர்காலம்
சிறப்புமிக்க புகழ் வாழ்க்கை
சின்னச் செடியே பின்னாளில்
செழித்துப் பெரிய மரமாகும்
சின்ன வயது பழக்கம் தான்
திறமை என்று வளர்ந்திடுமே
நாளை தலைவர் நாமென்று
நம்பும் பெரியோர் கனவுதனை
நாளும் உணர்த்தும் கடமையென
நம்மை உயர்த்தும் வழிநடப்போம்.

வி.கீர்த்தனா
யா/வேம்படி மகளிர் உ.பாடசாலை.




## கேள்விக்கு என்ன பதில்? -31

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சேவையில் ஈடுபட
புதிய விமானம் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டது.
காலையில் கட்டுநாயக்கா விமானத் தளத்திலிருந்து சென்னை
விமான நிலையத்திற்கு குறித்த விமானம் சென்றடைய
இரண்டரை மணித்தியாலங்கள் எடுத்தது. ஆனால் மாலையில்
சென்னையில் இருந்து புறப்பட்ட குறித்த விமானம்
கட்டுநாயக்காவை வந்தடைய 150 நிமிடங்கள் எடுத்தன.
இந்த நேரவித்தியாசம் ஏன் ஏற்பட்டது?
(சரியான விடையை 26.07.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)

## கேள்விக்கு என்ன பதில்? -29இன் சரியான விடை

பறவையின் கண்கள் அவற்றின் முகத்திலேயே இருக்கும்.

### கேள்விக்கு என்ன பதில்? - 29- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - அ.த.ரூத்ஸ்ரெபானி, இல.23, பிளச்சர் ஒழுங்கை, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
இரண்டாம் பரிசு - காத்தலிங்கம் உதயமலர், கெந்தியகாடு, தொண்டைமானாறு.
மூன்றாம் பரிசு - ஸ்ரீகதிர்காமநாதன் கனோஜா, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.

### பாராட்டுப் பெறுவோர்:

01) இராசேந்திரம் தஜிதா
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
02) த.நிஷாந்தன்,
நலன்புரி நிலையம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
03) ஜீ.ஜெனிவர் டிலக்ஷி,
சங்கானை வீதி, அச்சுவேலி.
04) தயாளினி தயாளன்,
கனகசபை வீதி, மானிப்பாய்,
05) செ.செந்றோஜி,
ஊரெழு வடக்கு, சுன்னாகம்.
06) ஜெ. உஷாந்தினி, அந்திரான்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
........................ ........................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




### ஜூலை 10



அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல நாவலாசிரியர் சௌல் வெலோவ் என்பவர் 1915ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் திகதி பிறந்தார்.

### ஜூலை 11

வெண்கல யுகத்து மனிதர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து, பல உண்மைகளைக் கண்டறிந்த தொல்பொருள் ஆய்வாளரான ஆர்தர் இவான்ஸ் என்பவர் 1941ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் திகதி இறந்தார்.



### ஜூலை 12



ரோம் தேசத்து சக்கரவர்த்தியாக விளங்கிய ஜூலியர் சீஸர் கி.மு. 102ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி பிறந்தார். இதனாலேயே ஒவ்வொரு வருடத்தில் வருகின்ற ஏழாம் மாதம் 'ஜூலை' என பெயர் பெற்றது.

### ஜூலை 13

ஒரு நிகழ்வொன்று நடந்துகொண்டிருக்கும் போதே அதனை உலகெங்கும் உள்ள மக்கள் நேரடியாகத் தொலைக்காட்சிகளில் கண்டுகளிப்பது சர்வசாதாரணமாகி விட்டது. இவ்வாறான நேரடி ஒளிபரப்பு நிகழ்வு 1985ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி நடைபெற்ற இசை நிகழ்வு ஒன்றை நேரடியாக ஒளிபரப்புவதனூடாக ஆரம்பமானது.



### ஜூலை 14




ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 14ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் தேசிய தினமாகக் கொண்டாடப்படுகின்றது. பிரெஞ்சுப் புரட்சியின் ஞாபகார்த்தமாகவே இத்தினம் பிரான்ஸ் நாட்டின் தேசிய தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

### ஜூலை 15

தமிழக மக்களால் பெருந்தலைவர் என்று மதிக்கப்பட்ட காமராஜர் 1903ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி பிறந்தார்.



### ஜூலை 16



1945ஆம் ஆண்டு ஜூலை16ஆம் திகதிதான் முதலாவது அணுகுண்டுப் பரிசோதனை நியூ மெக்ஸிகன் பாலைவனத்தில் நிகழத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான

## தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்-2009

**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்கு மிகப்பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

01. வனவிலங்கு - புல்வெளிகளை விரும்பும் - தாவர உண்ணி.





02. ஊர்வன - நீந்தக்கூடியது - பற்கள் இல்லாதது.





3ஆம், 4ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருக்களின் தொடர்பை அவதானித்து அடுத்துவரும் உருவின் கீழ்க் கோடிடுக.

03.




04.





05.



இவ் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 10 2) 16 3) 18

06. உருவில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை பொருத்தமான மூன்று கட்டங்களாக வகைப்படுத்தினால் மிகவும் சரியான கட்டம் எது?





1) F : C, D : A, B : E

2) A : E, C : F, B : D


3) A . E, F : D, C : B

7ஆம், 8ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களின் இடைவெளிகளில் வரவேண்டிய மிகப்பொருத்தமான பகுதியின் கீழ்க் கோடிடுக.

07.




08.




9ஆம், 10ஆம் வினாக்களில் உள்ள பழமொழிகள் உணர்த்தும் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.

09. கிட்டாதாயின் வெட்டென மற
   1) செய்கின்ற காரியங்களை உடனே மறக்க வேண்டும்.
   2) கிடைக்க இயலாத ஒன்றை உடனே மறந்துவிட வேண்டும்..
   3) கிட்ட இருப்பவைகளை உடனே மறந்துவிட வேண்டும்.

10. மனமுண்டால் இடமுண்டு
   1) மனம் என்று ஒன்று இருந்தால் கட்டாயம் இதயமும் இருக்கும்.
   2) மனம் இருந்தால் விரும்பிய இடங்களுக்கெல்லாம் செல்லமுடியும்.
   3) விரும்பினால் யாருக்கும் உதவி செய்யலாம்.

11ஆம், 12ஆம் வினாக்களுக்கு பின்வரும் கோட்டுப்படத்தின் துணைகொண்டு விடை காண்க.


11. சிறுவன் x எனும் இடத்தில் இருந்து புறப்பட்டு A வழியாக வீட்டை அடைவதற்கு எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பியுள்ளான்?

1) 1 2) 3 3) 2

12. சிறுவன் x எனும் இடத்தில் இருந்து புறப்பட்டு A வழியாக வீட்டை அடைந்து B வழியாக திரும்பவும் ஆரம்பித்த இடத்தை அடைவதற்கு எடுக்கும் தூரம் யாது?

1) 765m 2) 750m

3) 800m





13. தரப்பட்ட கோலத்தை அவதானித்து வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.


583 → 358 → 835 → ..........

**14ஆம், 15ஆம் வினாக்களில் வெற்றுக்கூடுகளுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.**

14.




15.




நிசாந்தின் வயதின் 5 மடங்கு அப்பாவின் வயதாகவும், 4 மடங்கு அம்மாவின் வயதாகவும் இருந்தது. மூவரது வயதுகளின் கூட்டுத்தொகை 60 வயதுகள் ஆகும்.


16. நிசாந்தின் தாயாரின் வயது யாது?

1) 30 2) 24 3) 20

17. நிசாந்தின் வயது 10 ஆக இருக்கும்போது தந்தையின் வயது யாது?

1) 30 2) 32 3) 34

தரப்பட்ட வென்வரிப்படத்தை அவதானித்து 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு விடை தருக.




18. கணிதத்தையும் தமிழையும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?

1) 16 2) 9 3) 23

19. மூன்று பாடங்களையும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?

1) 9 2) 19 3) 7

20. ஆங்கிலத்தையும் கணிதத்தையும் மட்டும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?

1) 13 2) 10 3) 17

கபிலனின் சகோதரி தனக்கு மூன்று ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருக்கின்றனர் எனக் கூறினாள்.


21. கபிலனின் சகோதரிகளின் எண்ணிக்கை யாது?

1) 2 2) 3 3) 4


22. கபிலனின் குடும்ப ஆண் சகோதரர்களினதும், சகோதரிகளினதும் எண்ணிக்கை யாது?

1) 5 2) 7 3) 6

23.




24. தாவரம், இருவித்திலைத்தாவரம், பலாமரம் என்பவற்றிற்கிடையிலான தொர்பை சரியாகக் காட்டும் உரு எது?





25. 15m நீளமும் 8m உயரமும் உடைய சுவருக்கு வர்ணப்பூச்சு பூசுவதற்கு $2l$ பூச்சு தேவை எனின், 30m நீளமும் 11m உயரமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசத் தேவையான பூச்சின் அளவு யாது?

1) $5.5l$ 2) $5l$ 3) $4.5l$

தயாபரனின் மனைவி சகுந்தலா, மகன் திசோக், தயாபரனின் தந்தை கந்தசாமி, தாய் விசாலாட்சி, திசோக்கும் டிலக்சினியும் சகோதரர்கள் ஆவர். திசோக்கின் சித்தப்பா கபிலன், தயாபரனின் சகோதரி பவித்திரா.

இவ்வரிப்படத்தை அவதானித்து 28 - 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.




26. தயாபரனின் பெற்றோரைக் குறிக்கும் எழுத்துக்கள் எவை?

1) M, P 2) F, H

3) P, B

27. B இற்கும் R இற்கும் இடையிலான உறவு முறை யாது?

1) தாய் - மகள் 2) தாய் - மகன்

3) மாமி - மருமகள்

28. R இற்கும் M இற்கும் இடையிலான உறவு முறை யாது?


1) மாமி - மருமகள் 2) மாமி - மருமகன் 3) தாய் - மகள்

கீழே சில மரக்குற்றிகள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் வகையிலமைந்து காணப்படுகின்றன.


29. இவ் உருவை A யில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1) 2) 3)



30. இவ் உருவை B யில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



31. நான் வழமையாக வெள்ளிக்கிழமைகளில் கோயில் செல்வேன். கோயில் செல்வதற்கு முதல் நாள் என்னைக் கண்ட மிதுசன் "நாளை மறுதினம் உன் வீட்டுக்கு வருவேன்" எனக் கூறினான். எனின், மிதுசன் எனது வீட்டுக்கு வரும் தினம் யாது?
1) ஞாயிறு 2) திங்கள் 3) சனி

32. வகுப்பு ஒன்றில் ரமேஸ் நிசாரை விட கூடிய புள்ளிகளையும், கபீரைவிட குறைவான புள்ளிகளையும் பெற்றான். கரன ரமேசை விட கூடிய புள்ளிகளைப் பெற்றபோதும் அவனால் முதலிடத்துக்கு வரமுடியவில்லை எனின், முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்கள் யாவர்?
1) கபீர் - ரமேஸ் 2) கரன் - ரமேஸ் 3) ரமேஸ் - கரன்

33. சதுர வடிவான கடதாசியை நான்காக மடித்து வெட்டியபின் அதைத் திரும்பவும் விரித்தால் அதன் சரியான தோற்றத்தைக் காட்டும் உரு எது?



1 2 3

34ஆம், 35ஆம் வினாக்களில் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன, அவற்றுள் சரியான கூற்றைத் தெரிந்து இலக் கத்தை அருகில் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.


34. 1) கபிலனுக்கு சகோதர சகோதரிகள் மூவர் உள்ளனர். கபிலனின் அண்ணாவிற்கு 3 சகோதரிகள் உள்ளனர்.
2) போட்டி ஒன்றில் மூவர் பங்குபற்றினர். அதில் மூன்றாமிடத்தை இருவர் பெற்றனர்.
3) ரவி 75 ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கிய பின் 100 ரூபா கொடுத்தார். மீதியாக அவர் பெறும் தொகை, கொடுத்த பணத்தின் 1/4 பங்காகும்.
( ...................... )

35. தாரணி "சிலவேளை நான் நாளை பாடசாலை வரமாட்டேன்" எனக் கூறினாள். எனின்,
1) நாளை மட்டும் தாரணி பாடசாலை வரமாட்டாள்.
2) தாரணி பெரும்பாலும் நாளை பாடசாலை வருவாள்.
3) நாளை கட்டாயம் தாரணி பாடசாலை வரமாட்டாள். ( ...................... )

36. பின்வரும் எண்கோலத்தை அவதானித்து அடுத்து வரும் எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1, 2, 5, 10, ..............................

37ஆம், 38ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.




37. ஒரு அன்னாசிப்பழத்தின் விலை யாது?
1) 20
3) 30

38. இரண்டு அப்பிளின் விலை யாது?
1) 70 2) 50
3) 40

39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பாடலை வாசித்து விடை எழுதுக?

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவி நிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா

39. இப்பாடல் எதனை வேண்டிப் பாடப்பட்டுள்ளது?
1) உணவு 2) சுற்றுலா 3) விடுதலை


40. இப்பாடலில் எங்கு எல்லாம் தினமும் சுற்றித் திரிய வேண்டும் எனக் கூறப்படுகிறது?
1) வானம் 2) சோலை 3) பாடசாலை

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 17 இன் பகுதி 11 உம் அடுத்தவாரம் வெளிவரும்......


**ஆக்கம்:- ஆசிரியர்**
**திரு.எஸ்.தயாளலிங்கம்.**
**திருகோணமலை.**

**கல்விச்சுடர் தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.**
**021-2229944 / 071-6850005 / 071-4273035.**





வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையினால் வட இந்து மகளிர் பாடசாலையில் நடத்தப்பட்ட மாணவர்க்கான சமூக ஒருமைப்பாட்டுக்கான கண்காட்சியை பாடசாலை மாணவி ஒருவர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் வடமராட்சி வலயக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான சி.புஷ்பலிங்கம், செ.உதயகுமார் ஆகியோருடன் சிறப்பு விருந்தினர்கள் நிற்பதையும், மாணவர்களினால் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: சுந்தா)






உலக நாடக தினத்தை (மார்ச் 27) முன்னிட்டு ஊரெழு கணேச வித்தியாலயத்தில் நாடக தினம் எளிமையாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வினை பாடசாலை அதிபர் ரி.திரிகரன் அவர்கள் மங்கள விளக்கை ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் சி.நடராஜா மற்றும் நாடகப் பொறுப்பாசிரியர் செ.சிவகுமார் ஆகியோர் நிற்பதையும், 'எதிர்பார்ப்புக்கள் நிஜம்தானா' என்ற நாடக நிகழ்வை பாடசாலையின் தரம் - 10 மாணவர்கள் மேடையில் நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல பகுதிகளிலும் இருந்து வந்து கூடும் இளைஞர்கள் தலையாளியில் மக்களுக்குத் தொல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வண்ணார்பண்ணை, தலையாளி பகுதிக்கு பலஇடங்களிலும் இருந்து வந்து ஒன்றுகூடும் இளைஞர்களால் அப்பகுதி மக்களுக்கு பெரும்தொல்லை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் திருட்டுக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று அப்பகுதி மக்களால் விசனம் தெரி விக்கப்படுகின்றது.

கல்வி நிலையத்துக்குச் செல்லும் மாணவிகள், பாடசாலை செல்லும் மாணவிகளுடனும் தகாத சேஷ்டைகளில் இவர்கள் ஈடுபடுவதாகவும் அதனைத் தட்டிக் கேட்கும் மக்கள் மீது தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

பல பகுதிகளில் இருந்து வந்து அங்கு ஒன்றுகூடும் இளைஞர்கள் அந்தப் பகுதியில் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் கூறுகின்றார்கள்.

இதேபோன்று தனியே செல்லும் பெண்களின் சங்கிலிகளை அபகரித்துச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(203-86)

# வாசகர் திருமுகம்

## சுயவிவரங்களைப் பாதுகாப்பார்களா?

கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட பிற மாவட்டங்களில் கடமையாற்றிய அரச ஊழியர்களில் நூற்றுக்கணக்கானோர் ஏ-9 பாதை மூடிய நாளிலிருந்து பிற மாவட்டங்களில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் இவர்களது சுயவிவரக் கோவைகள் நிரந்தரமாகக் கடமையாற்றிய நிலையங்களிலேயே இருந்தமையால் சம்பள ஏற்றங்கள், பதவி உறுதிப்படுத்தல்கள் எவையும் இன்றுவரை கிடைக்கவில்லை. சுயவிவரக்கோவை இல்லாத ஊழியரின் நிலை அனாதைநிலை என்பது அனைவரும் அறிந்ததே. தற்போதைய நிலையில் இவர்களது சுயவிவரக் கோவைகள் அழிவடையாது இருக்குமா என்பதும் சந்தேகமே. கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை ஏ-9 வீதியை அண்மித்தே பெரும்பாலான அரச நிறுவனங்கள் காணப்படுகின்றன. எனவே ஏ-9 வீதியை அண்மித்துள்ள அரச நிறுவனங்களிலுள்ள சுயவிவரக் கோவைகளையாவது மீட்பதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப் பார்களா? வரப்போகும் மழைகாலத்திற்கு முன்பாக உடனடியாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மீசாலை. கே.கே.அன்ரன்.

## தீவுப்பகுதி 'நேதாஜி' கிராமத்தை ஏன் புறக்கணிக்கிறார்கள்

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே/15 வேலணை தென்கிழக்கு அலுவர் பிரிவில் நேதாஜி கிராமம் உள்ளது. இப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இம்மக்களில் அநேகமானவர்கள் கூலி விவசாயத் தொழிலாளர்களாகவே உள்ளனர்.

இப்பகுதியில் அபிவிருத்திப் பணிகள் ஏனைய பகுதிகளைப் போல் அல்லாது வளர்ச்சி குன்றியே காணப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திகள் செய்யப்படுகின்ற இந்நிலையில் 'நேதாஜி' கிராமம் புறமொதுக்கப்பட்டு வருவது மிகவும் மனவேதனைக்குரியது.

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு உள்ளது போல் அனேகமான வீடுகள் ஓலைக் குடிசைகளாகக் காட்சி அளிக்கின்றன. இப்பகுதியில் வீட்டு வசதிகள், போக்குவரத்து, குடிதண்ணீர், மின்சாரம் ஆகிய அடிப்படை வசதிகள் சீராக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. பல தடவைகள் இது சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரிலும் கடிதமூலமும் தொடர்புகள் கொண்டும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. இந்நிலையால் நாங்கள் புறக்கணிக்கப்படுகின்றோம் என்று எண்ண வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி பகுதி மக்களின் தேவைகளை இணங்கண்டு ஆவன செய்ய முன்வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

வேலணை கிழக்கு. பொன். கனகரத்தினம் ஜே.பி.

## கடவை காப்பாளர்களாகிய எமக்கும் விமோசனம் வருமா?

1988 இல் அமரர் பிறேமதாசாவின் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக் காப்பாளராகக் கடவை ஒன்றிற்கு 6 பேர் வீதம் கொடிகாமத்திலிருந்து காங்கேசன்துறை வரையும் 408 பேர் கடவைக் காப்பாளராக அமர்த்தப்பட்டோம். அதில் மீசாலைக் கடவையில் வே.தங்கராசா ஆகிய நானும் அமர்த்தப்பட்டுக் கடமையாற்றினேன்.

கடவைக் காப்பாளர்களாக இருந்தபோதிலும் கொடிகாமத்திலிருந்து காங்கேசத்துறை வரை புகையிரதத் தண்டவாளம் மாற்றும் வேலையும் செய்து வந்துள்ளோம். தொடர்ந்து 5 வருடங்கள் இடைநிறுத்தாது சேவையாற்றியுள்ளோம். 1990 ஆம் ஆண்டின்பின் புகையிரத சேவை வடபகுதிக்கு இல்லாமல் போனதால் எமக்குச் சம்பளமும் தரப்படாததால் நாம் மீண்டும் வறுமைக்குத் தள்ளப்பட்டோம். தொடர்ந்து சேவையாற்ற விரும்புகின்றோம். தொடர்ந்து சேவையாற்றியிருந்தால் எமது சேவை நிரந்தரமாக்கப்பட்டிருக்கும்.

மேலும் எம்மை வேலைக்கு அமர்த்தும்போது நியமனக் கடிதம் வழங்கப்படாமையால் எம்மீது அரசு கவனம் எடுக்காமல் இருக்கின்றது. ஜனநாயக நாட்டின் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக் காப்பாளரின் நிலை மேய்ப்பன் இல்லாத மந்தை நிலையில் இருக்கின்றது. எம்மைக் கவனத்தில் எடுத்து எமக்குப் புகையிரதத் திணைக்களத் தில் மீண்டும் வேலை வழங்கி எமது வாழ்வைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். பாதிப்பட்ட தொழிலாளரில் முதன்மையாகப் பாதிக்கப்பட்டவர் நாமே.

மீசாலை மேற்கு. வே.தங்கராசா.

## லக்ஷபான மின்சாரம் வந்த காலத்திலும் மின்தடை இருந்தது

யதார்த்தத்தை அறியாதவர்கள் கருத்துக்களை தமது புத்திக்கு எழுதுகிறார்கள். இன்று எமது யாழ்ப்பாணத்திற்கு இவ்வளவாவது மின்சாரம் கிடைக்கிறது என்பதை எவரும் சிந்திப்பதில்லை. லக்ஷபான மின்சாரம் வந்த காலத்திலேயே மின்தடை இருந்ததை மறந்துவிட்டோம். இயந்திரங்கள் பிழைப்பதும் திருத்துவதும் தவிர்க்க முடியாதது.

மேலும் சகல உத்தியோகத்தர்களும் தொழில் செய்பவர்களும் ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே வீடுகளில் நிற்பார்கள். ஓர் ஆறுதல் பொழுது போக்கு றேடியோ கேட்பது, ரி.வி பார்ப்பது. நானும் ஒரு தொழிலாளி. 6 நாள்களும் வேலை. இரவு 7 மணிக்கே வீடு திரும்புவேன். வீட்டில் பிள்ளைகள் படிப்பார்கள். ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் எல்லோருமாக ரீ.வி பார்ப்போம். மின்சாரம் தடைப்படும் என்று 3,4 நாள்களுக்கு முன்னரே அறிவிக்கின்றார்கள். அதன்படி நாங்கள் வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வோம் அல்லது ஞாயிற்றுக்கிழமை வேலை செய்வோம்.

எமது இயந்திரங்கள் திடீரென பழுதடைந்தால் என்ன செய்கிறோம் என்பதை சிந்தித்தால் எல்லாம் சரிவரும்.

முன்னர் ஞாயிற்றுக்கிழமைகளில் மின்தடை நடைபெற்றது. பலரின் வேண்டுகோளுக்கிணங்கவே சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டது.

ஆகவே ஞாயிறுகளில் மின்தடை ஏற்புடைத்தல்ல என்பது என்போன்ற பலரின் கருத்து.

யாழ்ப்பாணம். ப. சீனிராசா.

# செய்திச்சரம்.....செய்திச்சரம்

## பிரிக்கப்பட்ட விவசாய சம்மேளனத்தை விரைவில் பதிவுசெய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 16

இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்ட வாலி விவசாய சம்மேளனம் விரைவில் பதிவு செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அலுவலர் [illegible] கிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார்.

நவாலி வடக்கு விவசாய சம்மேளனம், நவாலி கிழக்கு-தெற்கு விவசாய சம்மேளனங்களின் செயலாளர்களை உரிய ஆவணங்களுடன் சந்திக்குமாறு கோரியுள்ளார்.

அங்கத்தவர் எண்ணிக்கை, நிதி மற்றும் ஆவணங்கள் என்பனவும் இன்று செயலாளர், பொருளாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (203-302)

## குருநகரில் கல்விச் செயற்பாடு

குருநகர்,ஜூலை 16

குருநகர்-பேகன்-ஒஸ்லோ அமைப்பு குருநகரில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் குருநகரைச் சேர்ந்த மாணவர்களுக்காக விசேட வகுப்புகளை அனுபவம் மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலில் நடத்தி வருவதாகவும் இவ் வகுப்புக்களில் சுமார் ஐம்பது மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்று வருகிறார்கள் எனவும் இவ் அமைப்பின் பொருளாளர் பே.பிரான்ஸிஸ் தெரிவித்தார். (203-51)

## சமய அறிவுப் போட்டி முடிவு

கோப்பாய்,ஜூலை 16

கோப்பாய் வடக்கு ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம் கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு நடத்திய சைவ சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

பாலர் பிரிவு- சி.கோகுலஸ்ரீ, க.பிரசாத், அ.தினேஷகா.

கீழ்ப்பிரிவு- பா.வஜிந்தன், ச.கீர்த்தனி, சி.தர்ஷா.

மத்திய பிரிவு- சி.நிரோசிஜா, வி.வினுஜன், சி.ஹம்ஸா.

மேற்பிரிவு-சி.ஜனோஜா, வி.சுகன்ஜா, சி.சுவஸ்திகா, ம.தவலோஜினி.

அதிமேற்பிரிவு-சி.கீர்த்திகா, வி.சிந்துஜா. (203-72)

## கைதடி நவீல்ட் பாடசாலைக்கு கரித்தாஸ்-கியூடெக் உதவி

வண்ணை,ஜூலை 16

கரித்தாஸ்-கியுடெக் நிறுவனம் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு 6 லட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதி வாய்ந்த கற்றல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான பொருள்களை வழங்கி உதவியுள்ளது.

இவற்றில் கணனித் தொகுதி, தையல் இயந்திரம், 5 பசுக்கள் மற்றும் 17 ஆடுகள், 200 கோழிக் குஞ்சுகள், 2 நீர் இறைக்கும் இயந்திரம் என்பன அடங்கும்.

நவீல்ட் பாடசாலை மாணவ, மாணவிகளின் கற்றல் மற்றும் அன்றாட சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இப் பொருள்கள் வழங்கப்பட்டிருப்பதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (203-100)

## பார்வைக் குறைபாடுள்ளோருக்கு கண்ணாடி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை16

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

சண்டிலிப்பாய் சிரேஷ்ட சமூக சேவை அதிகாரி வி. அருந்தவராசா இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாகப் பார்வைக் குறைபாடு உடையவர்கள் மருந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பட்சத்தில் சமூக சேவைத் திணைக்களத்தின் ஊடாக கண்ணாடிகள் பெற்று வழங்கப்படுமெனக் கூறியுள்ளார். (203- 302)

## கலையரசு சொர்ணலிங்கத்தின் நினைவு தின நிகழ்வு

சுழிபுரம், ஜூலை16

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தினர் கலையரசு சொர்ணலிங்கம் நினைவு தின விழாவை எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

'கலையரசின் வாழ்வும் கலைத் தொண்டும்' என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தி பரிசுகள் வழங்கவுள்ளனர். இப்போட்டி சண்டிலிப்பாய் கோட்ட [illegible] மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ளது. (203-28)

## தொழிற்றுறை விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். குடாநாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் இயங்கி வந்த தொழிற்றுறைகளில் இயங்காமல் உள்ள தொழிற்றுறைகளின் உரிமையாளர்கள் தமது விவரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகத்தில் உள்ள தொழிற்றுறைத் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார். (201)

## அமைச்சர் டக்ளஸ் நெடுந்தீவுக்கு விஜயம்

நல்லூர்,ஜூலை 16

நெடுந்தீவுக்கு விஜயம் செய்திருந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவு மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

அத்துடன் சிறுவர்களுக்குப் பசுப்பால் மற்றும் போஷாக்கு உணவுப் பொருள்களையும் வழங்கியதுடன் நுளம்பு வலைகள், மூக்குக் கண்ணாடிகள், பயன்தரு மரக்கன்றுகளையும் வழங்கினார். (203-111)

## சண்டிலிப்பாய்பிரதேசத்தில் 46 வேலைத் திட்டங்கள்

நவாலி,ஜூலை 16

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் 'கமநெகும' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 46 வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களுக்காக 36.87 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்துள்ளார். (204-100)

## தென்பகுதிக்கு வெங்காயம்

கோப்பாய், ஜூலை16

வலி.கிழக்குப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் பெருமளவு நிலப்பரப்பில் செய்கை பண்ணப் பட்ட வெங்காயத்துக்குச் சந்தை வாய்ப்பு வசதிகள் கிடைத்தமையினால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ வெங்காயம் 40 ரூபா தொடக்கம் 45 ரூபாவரை கொள்வனவு செய்யப்படுவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (204-72)

## இலகு வேலைத்திட்டம் நவாலியிலும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

உலக உணவுத்திட்ட இலகு வேலைத் திட்டம் நவாலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நவாலி வடக்கு கல் ஒழுங்கை மக்கள் பங்களிப்புடன் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இலகு வேலைத்திட்டத்தின்கீழ் அனைத்து கிராமிய வீதிகளும் முன்னுரிமைப் அடிப்படையில் மீள் அபிவிருத்தி செய்யப்படுமென நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் தெரிவித்தார். (203-302)

## மரக்கிளையுடன் விழுந்தவருக்கு விலா எலும்பு முறிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை16

தறித்த மரக்கிளையுடன் நிலத்தில் வீழ்ந்தவருக்கு விலா எலும்பு முறிந்தது. இச்சம்பவம் அல்லாரையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ.துரைராஜா (வயது 56) என்பவர் விலா எலும்பு முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203- 207)

## பெறுபேற்றுச் சான்றிதழ் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 16

2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு வந்துசேர்ந்துள்ளன.

எனவே பாடசாலை அதிபர்கள் வலய அலுவலகத்தில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களைக் கைவிட்ட அமைப்புகள் மீண்டும் அவைகளைக் கையில் எடுக்கும் நிலை ஏற்படலாம்

## 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்களுக்கு அமைச்சர் திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை16

அரசமைப்புக்கு 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதையடுத்து தமது ஆயுதங்களைக் களைந்துவிட்ட இயக்கங்கள் அந்தத் திருத்தம் செயற்படுத்தப்படாவிட்டால் மீண்டும் ஆயுதங்களைக் கையில் எடுக்கும் நிலை ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சரும் சர்வகட்சி மகாநாட்டின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

இலங்கை - இந்திய அமைதித் தீர்வு கைச்சாத்திடப்பட்டதையடுத்து 1987ஆம் ஆண்டு 13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். உட்பட சில அமைப்புகள் ஆயுதங்களைக் கைவிட்டன.

கடந்த திங்கட்கிழமை பொதுக்கூட்டம் ஒன்றில் உரைநிகழ்த்திய பேராசிரியர் திஸ்ஸ விதாரண 13ஆவது திருத்தம் இடைக்காலத் தீர்வுத் திட்டமாகவே கொண்டுவரப்பட்டது. தமிழ்மக்கள் தங்களுக்கு ஏதோ நன்மை கிடைக்கிறது என்று உணரக்கூடியதாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஒரு சாதகமான சூழ்நிலை உருவாகுவதாக இருக்கும் என்று கூறினார்.

உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டவர்கள் 13ஆவது திருத்தத்தை எதிர்க்கிறார்கள். இவர்களால் ஏற்கனவே ஆயுதங்களைக் கைவிட்டவர்கள் மீண்டும் அவைகளைக் கையில் எடுக்கும் நிலை ஏற்படலாம் என்று கூறிய அமைச்சர் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டாலும் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படவேண்டிய தேவை இல்லாமல் போய்விடவில்லை - என்றார். (ப)

# தமிழரசுக் கட்சியின் தேர்தல் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்துக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நாவாந்துறை, ஈச்சமோட்டை, கல்வியங்காடு, நல்லூர், அரசடி ஆகிய இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா, யாழ்.மாநகர சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் எம்.றெமிடியஸ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றி வருகின்றனர்.

இதேவேளை யாழ்.நகரின் ஏனைய இடங்களிலும் இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. அடுத்த சில தினங்களில் யாழ்.வரவுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளார்கள். (50)

# கனடாவில் தமிழ் இளைஞர் குழு மோதலில் படுகொலை!

ரொறன்றோ,ஜூலை16

கனடா, ரொறன்றோ நகரில் வார இறுதியில் இரு தமிழ்க் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் கிரிஸ்ரியன் தனபாலன் (வயது-22) என்ற தமிழ் இளைஞர் கொல்லப்பட்டுள்ளார்.

கரப்பந்தாட்டத்தின்போது ஆடுகளத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதாகவும், மொட்டையான பொருளால் தாக்கப்பட்டுத் தலையில் காயமடைந்த தனபாலன் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சற்று நேரத்தில் மரணித்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வாய்த்தர்க்கத்திற்குப் பின்னர் நள்ளிரவில் இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் மீண்டும் மோதியுள்ளனர்.

தனபாலனும் அவரது நண்பர்களும் கிரிக்கெட் மற்றும் பேஸ்போல் துடுப்புகளால் தாக்கப்பட்டனர் எனத் தெரிகின்றது.

குறிப்பிட்ட பகுதியில் வசிப்பவர்கள் உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

நபர் ஒருவர் இரு குழுக்களையும் சமாதானப்படுத்துவதற்கு முயன்றமையைத் தாங்கள் பார்த்தனர் எனவும் பொதுமக்கள் பொலிஸாரிற்குத் தெரிவித்துள்ளனர்.

அந்தக் குறிப்பிட்ட நபரைப் பொலிஸார் தற்போது தேடி வருகின்றனர்.

மோதலில் ஈடுபட்ட இரு குழுவினரும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தனபாலனின் மரணத்தால் அவரது குடும்பத்தினர் அதிர்ந்து போயுள்ளனர் எனக் கனடா தமிழ்க் காங்கிரஸ் தலைவர் டேவிட் பூபாலபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த தனபாலன் உயிரியல் தொழில்நுட்பக் கல்வி பயிலும் நல்ல ஓர் இளைஞர் என்றும் கூறப்பட்டது. (சி)

# உசன் இராமநாதன் ம.வியை சொந்த இடத்தில் இயக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தைச் சொந்த இடத்தில் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டு உசன் பகுதி மக்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

இவ்வித்தியாலயம் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்ததால் கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் மூடப்பட்டு போக்கட்டியில் உள்ள தனியார் காணியில் இயங்கிவருகிறது.

இதனால் இவ்வித்தியாலய மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (50-207)

# ஆசைகளைக் கட்டுக்குள் வையுங்கள்

இன்னாளில் உலகம் முழுதும் பதட்டமும், அமைதியின்மையும் காணப்படுகின்றன. அமைதியென்பதே எங்கும் இல்லை. இதற்கெல்லாம் காரணம் மனித மனங்களில் இடையறாது பெருகிக்கொண்டிருக்கும் ஆசைகள்தான். மனம் என்பது ஆசைகளின் மூட்டை. ஆசைகளைக் கட்டுக்குள் வைக்கவில்லையென்றால் உங்களுக்கு மன அமைதி என்பதே கிடைக்காது.

இதோ ஒரு கைக்குட்டை இருக்கிறது. இது நூல்களால் ஆனது. நூல்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடி இந்தக் கைக்குட்டை உருவாகியிருக்கிறது. இதிலிருந்து ஆசைகள் என்கிற ஒவ்வொரு நூலாக வெளியே எடுத்துவிட்டால் மனம் என்பதே காணப்படாது. உள்ளத்தில் எழும் ஆசைகள் குறையக்குறைய வாழ்க்கைப் பயணம் மிகவும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஆசைகளைக் கட்டுக்குள் வைப்பதன் மூலம், மனதைத் தூய்மைப்படுத்த முடியும். ஆன்மீக, தார்மீக, உயர்குண நலன்கள் உள்ளே விரிவடையும்.

தார்மீக குணநலன்களைப் பற்றி ஆராய்வதும், சத்திய வழியில் நடப்பதும் மனித குலத்துக்கு எடுத்துக்காட்டான ஆதர்ச வாழ்வு வாழ்வதும்தான், தார்மீக குணநலன்களில் அடங்கும். வேதம் சொல்கிறது.

"சத்யம் ப்ரூயாத்", சத்யத்தையே பேசு! அது மேலும் சொல்கிறது. "ப்ரியம் ப்ரூயாத்". "ந ப்ரூயாத் சத்யம் அப்ரியம்".

பேசும் சத்யம் இனிமையானதாக இருத்தல் வேண்டும். மற்றவருக்கு நீங்கள் பேசும் சத்யம் பிடிக்காமல் இருந்தால் பேசாதீர்கள். அமைதியாக இருங்கள். இந்த வழிமுறையையே கடைப்பிடியுங்கள்! பகவத் கீதையும் உரைக்கிறது. "அனுத்வேக கரம் வாக்யம் சத்யம் ப்ரியம் ஹிதம் ச" - என, நீ சத்யம் மட்டும் பேசுவதோடு, அதனை இனிமையான முறையில் பேச வேண்டும். அது மட்டுமல்ல, நீ யாரிடம் பேசுகிறாயோ அவருக்கு நன்மை பயப்பதாக இருக்கவேண்டும். அது வீணாக அடுத்தவர் மனதில் உளைச்சலையும், பதட்டத்தையும் தரக்கூடாது. இதுதான் தர்மம். இதுதான் நேர்மைக் குணநலன்.



சாயி சிந்தனை

# அவுஸ்திரேலிய இரசாயனவியல் பரீட்சையில் சென்.பற்றிக்ஸ் மாணவர்கள் இருவர் சாதனை



ஜெ.அ.மோரிசன்

யாழ்ப்பாணம்,ஜூலை16

அவுஸ்திரேலிய தேசிய இரசாயனவியல் - பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் சென்.பற்றிக்ஸ் மாணவர்கள் இருவர் சாதனை படைத்துள்ளனர்.

ஜெ.அன்ரனி மேரிசன், சிவபாலன் செல்வநித்தியன் ஆகியோரே சாதனை படைத்துள்ளனர்.

இலங்கை இரசாயனவியல் நிறுவகத்தின் அனுசரணையுடன் மேற்படி பரீட்சையானது யாழ்.மாவட்டம் உட்பட இலங்கையின் பல மாவட்டங்களில் நடைபெற்றதுடன் இது உலக ரீதியாக பல்வேறு நாடுகளிக்குமிடையில் நடைபெறுகின்ற ஒரு பெறுமதி வாய்ந்த பரீட்சையாகும்.

மேலும் இப்பரீட்சை கனிஷ்ட பிரிவு, சிரேஷ்டபிரிவு என்ற இரு பிரிவுகளாக ஒரேநாளில் நடைபெறும். தரம் 11 மாணவர்கள் கனிஷ்ட பிரிவாகவும், தரம் 12 கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் சிரேஷ்ட பிரிவாகவும் கலந்துகொள்வது வழமை.

கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இப்பரீட்சையில் 15 பாடசாலைகள் கலந்துகொண்டன. இம்மாணவர்களில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கனிஷ்ட பிரிவு மாணவர்களான ஜெகநாதன் அன்ரனி மேரிசன், சிவபாலன் செல்வநித்திலன் ஆகியோர் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்ததுடன் யாழ்.மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இதற்கான பரிசளிப்பு நிகழ்வானது அண்மையில் கொழும்பிலுள்ள இலங்கை இரசாயனவியல் நிறுவகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் எம்.டி.பி.கொஸ்ரா பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.



சி.செல்வநித்திலன்

சிரேஷ்ட பிரிவில் இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் இந்நிறுவகத்தினால் வழங்கப்படும் மிகச் சிறந்த புலமைப்பரிசில் பெற்று இரசாயனத்துறையில் இந்நிறுவனத்தில் உயர்பட்டக்கல்வியைத் தொடர்வதற்கும் பூரண வாய்ப்பு வழங்கப்படும். இதன்மூலம் குறைந்த வயதில் பிள்ளை ஓர் இரசாயனவியல் பட்டதாரியாகும் வாய்ப்பு இருப்பதுடன் இங்கும் திறமைச்சித்திகள் பெறும் சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் மேலும் தனது உயர்கல்வியை தொடரும் சந்தர்ப்பங்களும் வழங்கப்படும்.

இவ்வருடம் இப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# ஆசியப் பல்கலைக்கழக அனுமதி பெற்றோரின் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

சேவா லங்கா நிறுவனம் ஊடாகப் பெண்களுக்கான ஆசியப் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்து ஜூன் 18, 19ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 11 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான கற்கை நெறி அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது.

தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

சாருகா செல்வராஜா (கொழும்புத்துறை), அபிராமி அமிர்தலிங்கம் (வல்வெட்டி), லோஜனா கணபதிப்பிள்ளை (கோப்பாய் வடக்கு), சொறுபிகா குணதிலகம் (சில்லாலை மேற்கு), மேகலா சபேஸ்வரன் (தொல்புரம் கிழக்கு), அனுசானி அழகராஜா (சுண்டுக்குளி), டிஷிகா தேவராஜா (கொக்குவில் கிழக்கு), சொப்னியா ஜீவநாதன் (அரியாலை மேற்கு), சுகந்தா பரமாநந்தம் (நல்லூர் வடக்கு), டர்சினி நடராஜா (சங்கானை), கம்சினி கேதீஸ்வர சர்மா (கொழும்பு - 13).

இது தொடர்பாக நேற்றைய பதிப்பில் 2ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் சில தவறுகள் ஏற்பட்டுவிட்டன. இதைத் திருத்தி வாசிக்கவும்.

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் வேலைக்கான உணவுத்திட்டப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

வலி.கிழக்குப் பிரதேசத்தில் இலகு வேலைக்கான உணவுத் திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் முன்னர் உலக உணவுத் திட்டத்தின்கீழ் நிவாரணம் பெற்று வந்த அனைவரும் இவ்இலகு வேலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இலகு வேலைத் திட்டத்தில் மக்கள் பொதுஇடங்களைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குடும்பத்தில் ஒரு அங்கத்தவர் மட்டும் இவ்வேலைத் திட்டத்தில் பங்குபற்றி வருவதோடு கிராமசேவையாளர் பிரிவு தோறும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (50- 224)



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கொழும்புத்துறை ஜீவபாதை [illegible] சபைக்கு விஜயம் செய்தார். அங்கு அந்த அமைப்பின் பிள்ளைகள், பொதுமக்கள் மத்தியில் [illegible] படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத் தேவாலய உற்சவத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்புக்கு அரசு ஏற்பாடு

கொழும்பு,ஜூலை16

மடு மாதா தேவாலயத்தில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, மதவாச்சி முதல் மடு தேவாலயம் வரை விசேட பாதுகாப்பு செயற்றிட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மடு தேவாலய வருடாந்த உற்சவம் நடைபெறும் எதிர்வரும் ஒகஸ்ட் 6 ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை இந்தப் பாதுகாப்பு செயற்றிட்டம் அமுலில் இருக்கும்.

மடு தேவாவலயத்தைப் புனரமைப்பதற்காக அரசு 4 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது எனவும், குடிதண்ணீர் உள்ளிட்ட சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் கூறப்படுகிறது.


இம்முறை மடு மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாட அரசு தீர்மானித்துள்ளது. அத்துடன், அமைச்சர்கள் சிலரை பிரதேசத்திற்கு அனுப்பி திருவிழாவுக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மன்னார் ஆயர் வண.ராயப்பு ஜோசப் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் ஏற்புத் தடை ஊசிக்குத் தட்டுப்பாடு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஏற்புத்தடை ஊசி மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் இந்த மருந்தினை தனியார் மருந்தகங்களில் வாங்கி வருமாறு அறிவுறுத்தப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (50-207)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாகாண மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே மன்னாரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் நான்காவது அணியினரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழியனுப்பி வைத்தார்.

பாடசாலை விளையாட்டு வீரர்கள், பொறுப்பாசிரியர்கள், விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய நான்காவது அணியைக் காங்கேசன்துறை முகத்தில் வைத்து அமைச்சர் டக்ளஸ் வழியனுப்பி வைப்பத்தை படத்தில் காணலாம். அருகில் வடபிராந்திய கடற்படைத்தளபதி அட்மிரல் ஜெயவர்த்தனவும் காணப்படுகிறார்.


## கட்டடம் வாடகைக்கு விடப்படும்

இல.19, யாழ்.ஸ்ரான்லி வீதியில் (தனராஜா பில்டிங்) அமைந்துள்ள கட்டடத்தின்

2ஆம் மாடி (2400 ச.அடி பரப்பளவான 2 தொகுதிகள்)

3ஆம் மாடி (4800 ச.அடி பரப்பளவான ஒரு தொகுதி)

சகல வசதிகளுடனும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0773-144861, 021 - 222 - 6727

## ஒரு சிற்றூர்தி (மினிபஸ்) வாடகைக்குத் தேவை

சாரதியுடன் அல்லது சாரதி இல்லாமல் சிற்றூர்தி ஒன்று மாதாந்த/ நாளாந்த வாடகைக்கு உடன் தேவை. காலை 7.30 மணிமுதல் இரவு 8 மணிவரை சேவைக்குப் பயன்படுத்தப்படும்.

கிழமை நாள்களில் 73, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை.

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமம் என்னும் முகவரியுடைய சின்னவன் இராசரத்தினம் என்பவரது தே.அ.அ. (612763631V), சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன கொக்குவிலுக்கும் யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

சி.நவரத்தினம்,
நீதிமன்ற வீதி, மல்லாகம்.
தொ.பே.: 077-1882128


## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2008 ஆம் ஆண்டில் கற்கை நெறியை முழுமையாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

எனவே இதுவரை வங்கியில் பணம் செலுத்தாத மற்றும் வினாக் கொத்துக்களை பூர்த்தி செய்து வழங்காத மாணவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் மக்கள் வங்கியின் SLIATE கணக்கில் 0025100133397613 இரண்டாயிரம் ரூபாவை வைப்பிலிட்டு அதற்குரிய பிரதியுடன் நிறுவனத்துக்கு சமூகமளித்து பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (201)

## வயோதிபப் பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

சங்கானை, ஜூலை 16

சங்கானைச் சந்தையில் மரக்கறி மற்றும் பொருள்களை வாங்கிச் சென்ற வயோதிபப் பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்றவர்கள் அவருடைய இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துச் சென்ற சம்பவம் சங்கானையில் இடம்பெற்றுள்ளது.

வயோதிபப் பெண்ணை வழிமறித்த இருவர் ஒரு ஆசிரியரின் பெயரைக் கூறி இவரைத் தெரியுமா? எனக் கேட்டபோது சைக்கிளின் பின்னால் இருந்த நபர் அவருடைய சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு தப்பியோடி விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய் மு.ப. 10 மணியளவில் சங்கானை ஒடக்கரை வீதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி பொன்மணி (58) என்பவரே சங்கிலியைப் பறிகொடுத்தவராவர். இதுபற்றி சங்கானை பாதுகாப்பு ... முறையிட்டுள்ளார். (50-29)


## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 ☆ 06 ☆ 1956

மறைவு 16 ☆ 06 ☆ 2009



## இரத்தினம் ஜெகநாதன்

கண்ணின் மணிபோல மணியின் நிழல்போல
எங்கள் குடும்பத்துடன் கலந்து இருக்கும்
எங்கள் தெய்வத்தின் நினைவு மண்ணும்
கடல் வானும் மறைந்து முடிந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.10, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (87070)

## கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்



எமது கல்லூரியின்
பௌதிகவியல் ஆசிரியை
திருமதி சுகந்தி சிறிகரனின்
பாசமிகு புதல்வி
**சங்கவி சிறிகரன்**
அவர்களின் திடீர் மரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய். (87071)
கல்லூரிச் சமூகம்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 ★ 12 ★ 1960



மறைவு 16 ★ 07 ★ 2005

## பாலையா சிவபாக்கியம் (சித்திரா)

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
ஈரிரண்டு ஆண்டுகள் உருண்டோடியும்
எம் கண்ணில் ஈரம் காயவில்லை அம்மா!
பாரினிலே எம்மை பரிதவிக்க விட்டுப்
போனதுவோ எம் தெய்வம்
கணம் தோறும் உள்ளத்தில் ஊற்றெடுக்கும்
உங்கள் ஞாபகத்தால் உள்ளம் உருகிநின்று
உங்கள் நினைவுகளோடு வாழ்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள்.

நாயன்மார் கட்டு,
நல்லூர். (87073)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1104 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 20 30 38 44

14-07-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 6,922,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 213,791 | 20/- | 4,275,820/- |
| 2 இலக்கங்கள் | 19,597 | 40/- | 783,880/- |
| 1 இல. + லக்கினம் | 19,411 | 60/- | 1,164,660/- |
| 2 இல. + லக்கினம் | 1,816 | 200/- | 363,200/- |
| 3 இலக்கங்கள் | 539 | 1000/- | 539,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,922,125/- | |
| மொத்தம் | | | 8,196,560/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 255,209 | | 8,696,560/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,399,700/-

ஆலிந்தயே ரண் வாசனாவ

வெற்றியாளர்
மதீஷ பலகசிங்க
மிரிஹான, நுகேகொட

| | |
|---|---|
| இரத்தினபுரி | 400323655-9-47 |
| களுத்துறை | 400324733-3-25 |
| மாத்தறை | 400315889-4-48 |
| மட்டக்களப்பு | 400323216-8-43 |
| திருகோணமலை | 400319582-9-16 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது 2008



உதயன் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை பல தடைகள், தடங்கல்கள், இன்னல்கள், இடையூறுகளுக்கு மத்தியிலேயே வளர்ந்து வந்துள்ளான். கடந்த 24 வருடங்களாகப் பல சவால்களையும், அச்சுறுத்தல்களையும், உயிர், உடைமை சேதங்களையும் சந்தித்தபோதிலும் அவன் உயர்ந்து நிற்பது வாசகர்களாகிய மக்களின் பலத்தினாலும் இறைவனின் இடையறாப் பேரருளினாலும் ஆகும்.

சோதனைகள், வேதனைகள் சூழ்ந்து வரும் காலங்களில் மனம் தளராது, பத்திரிகைப் பணிமக்கள் பணி ஒன்றே மனம் கொண்டு தமது உழைப்பைத் தந்து ஊக்கப்படுத்தும் பணியாளர்களும், பத்திரிகையாளர்களும், விளம்பரதாரர்களும், விற்பனை முகவர்களும் உதயனுக்கு உரம் தந்து வளர்ப்பவர்கள்.

இவர்கள் எல்லோரினதும் ஆதரவினால் உதயனுக்கு இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான கீர்த்திமிக்க விருது வழங்கப்பட்டுள்ளது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த, இதழியல் துறையில் சிறந்த செயற்பாடுகளுக்கான பத்தாவது விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.



உதயன் ஆசிரியர் ந.வித்தியாதரன் விருதைப் பெற்றுக்கொள்கிறார்.



நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் விருதுடன் மத்தியில். இருமருங்கிலும் உதயன், சுடர் ஒளி ஆசிரியர் ந.வித்தியாதரனும் சுடர்ஒளி வார இதழ் ஆசிரியர் ந.பத்மசீலனும்

## தனது பணிகளை தொடர்ந்து முன்னெடுக்கட்டும்

நீண்டகாலம் தமிழ் மக்களுக்காக பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் உதயனுக்கு இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விருது வழங்கப்பட்டது சாலப்பொருத்தமானதாகும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர துணிச்சலுடன் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் 'உதயன்' தொடர்ந்து தனது பணிகளை முன்னெடுக்க இறைவன் அருள்புரிய இறைஞ்சி அமைகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்,
நல்லை ஆதீன முதல்வர்.

## பாராட்டுகளும் வாழ்த்துக்களும்

நாடு நலம்பெற ஜனநாயகம் நிலைபெற- மக்கள் வளம் பெற- என நடுநிலை குலையாது உயரிய பணிசெய்த 'உதயன்' இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்த அதி உயர் கௌரவ விருதினைப் பெற்றுக்கொண்டமையையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். 'உதயன்' பத்திரிகையின் ஆரம்பகால இதழ் முதல் இன்றுவரை தொடர்ச்சியாக 'உதயன்' செய்தித் தாளினை மக்களுக்கு வழங்கும் விற்பனை முகவர் என்ற வகையில் நாம் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றோம்.

'உதயன்' மக்களுக்கு ஒளியூட்டி வழிகாட்ட வேண்டும் என்றும் மேலும் பல விருதுகளை பெறவேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம், பாராட்டுகின்றோம், போற்றுகின்றோம்.

சபா.புஷ்பநாதன், உதயன் விற்பனை முகவர்,
துர்க்கா பொத்தகசாலை, சுன்னாகம்.

## உதயனுக்கு பொருத்தமான விருது

உதயன் பத்திரிகைக்கு இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விருது வழங்கப்பட்டமை மிகவும் பொருத்தமான ஒன்று. உதயன் பத்திரிகை ஆரம்பித்த நாள் முதல் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் தனது பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

கடந்த இருபத்தி நான்கு வருடங்களுக்கு மேலாக குடாநாட்டிலிருந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பல்வேறு தரப்புக்களின் நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தனது பணியை 'உதயன்' தொடர்ந்து வருகின்றமை பாராட்டப்படவும் ஊக்குவிக்கப்படுத்தவேண்டிய ஒன்று.

ஊழியர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், தணிக்கை, கிரனைட் வீச்சு, துப்பாக்கிப் பிரயோகங்கள் விமானக்குண்டு வீச்சு போன்ற பலவிதமான சவால்களின் மத்தியிலும் 'உதயன்' இடைவிடாது தனது பணியைத் தொடர்ந்து வருவது போற்றப்படவேண்டியதொன்று.

இந்த வகையில் உதயனுக்கு வழங்கப்பட்ட விருதானது மிகப்மிகப் பொருத்தமானது என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

வட. இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

## உதயனுக்கு இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது இம்முறை 'உதயன்' நிறுவனத்திற்கு கிடைத்திருக்கிறது. இலங்கை பத்திரிகை ஆசிரிய சங்கமும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து இதழியில் துறையில் அதிஉயர் கௌரவ விருது என மதிக்கப்படும் விருது இம்முறை 'உதயன்' நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது மிகமிக பொருத்தமானதும் பாராட்டப்படவேண்டியதுமாகும். பல அச்சுறுத்தல்களின் மத்தியிலும் உதயன் தனது பத்திரிகை செயற்பாடுகளை தொடர்ந்து செய்துவருவது போற்றுதலுக்குரியது. எனவே, தொடர்ந்தும் மண்ணுக்கும் மக்களுக்கும் 'உதயன்' பத்திரிகை சேவையாற்ற வாழ்த்தி இறையாசி கூறி நிற்கின்றேன்.

யாழ்.ஆயர், இ.தோமஸ் சவுந்தரநாயகம்

## துணிச்சலான செயற்பாட்டின் வெகுமதி

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகையான உதயனுக்கு பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விருது கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாட்டில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையிலும் பத்திரிகா தர்மத்தைப் பேணி ஜனநாயக உரிமைகளுக்கு வலுச்சேர்த்த உதயனின் துணிச்சலான செயற்பாட்டுக்கு கிடைத்த வெகுமதியே இவ்விருதாகும்.

உயிர், உடைமை இழப்புகள் மத்தியிலும் காலத்தின் தேவையறிந்து செயற்பட்ட உதயன் இன்று போல் என்றும் உதயமாக எனது வாழ்த்துக்கள்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இணைப்பாளர்,
ஊடகவளங்கள் பயிற்சி நிலையம்,யாழ்.பல்கலைக்கழகம்.

## உதயன் பணி தொடரட்டும்

எமது பிரதேசத்தில் நீண்ட காலமாக மக்களின் நன்மதிப்பினைப் பெற்று சிறப்பான முறையில் வெளிவந்துகொண்டிருக்கும் 'உதயன்' நாளிதழுக்கு பத்திரிகைச் சுதந் திரத்தினை பாதுகாத்ததிற்கான உயர்விருது கிடைக்கப்பெற்றதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மையை, உள்ளவாறு மக்களைச் சென்றடைய மிகத் துணிச்சலுடன் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களின் மத்தியில் நாள்தோறும் நேரம் தவறாது ஒவ்வொருவரினதும் கரங்களில் சேர்க்கும் உதயனின் பணி தொடர வேண்டும்.

அது மட்டுமல்லாது இத்தகைய உயரிய விருதினை பெறுவதற்கு பல்வேறு வகைப்பட்ட அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது கடின உழைப்பினை நல்கிய உதயன் நிறுவனத்தினர், பிரதம ஆசிரியர், செய்தி ஆசிரியர் மற்றும் ஆசிரியபீடத்தினர் அனைவரையும் மனதார வாழத்துவதுடன் தமிழ் பேசும் மக்களின் உண்மைக் குரலாக தொடர்ந்தும் உதயன் வெளிவரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் கா.குகபாலன்,
தலைவர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சாந்தி, சமாதானம், ஒற்றுமையை நாட்டில் கட்டி வளர்க்கட்டும்

இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளில் 'உதயன்' பத்திரிகைக்கு இவ்வாண்டு மகத்தான விருது கிடைத்தமை குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். பல இடையூறுகளுக்கு மத்தியிலும் தன்பணி தொடரும் 'உதயன்' பத்திரிகைக்கு கிடைத்த வெற்றி போற்றுதலுக்குரியது. மதிப்பார்ந்த பிரதம ஆசிரியர், ஏனைய பத்திரிகைத்துறை சார் பணியாளர்கள் நிறுவன இயக்குநர் அனைவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள். நீதியை உண்மையை, நிதானத்தை என்றும் காத்திட பத்திரிகா தர்மம் பேணப்பட வேண்டும். 'உதயன்' பத்திரிகை இவற்றைப் பேணுவதற்காக அர்ப்பணிப்பு மிக்க பலரை இம்மண்ணில் காணிக்கையாக வழங்கியது. விருது பெறும் உதயன் பத்திரிகை எமது நாட்டில் சாந்தி, சமாதானம், ஒற்றுமையுணர்வை கட்டி வளர்க்க துணைசெய்யவேண்டி எல்லாம் வல்ல துர்க்கா தேவியின் திருவருள் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஆறு.திருமுருகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## தொடர்ந்து மக்கள் பணி செய்யட்டும்

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழ் மக்களின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் 'உதயன்' பத்திரிகைக்கு இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஊடாக பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத் ததற்கான விருது கிடைத்ததை இட்டு என் வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எத்தனையோ இடர்களைக் கடந்து பல தடைகளைத் தாண்டி துணிச்சலுடன் வெளிவந்து கொண்டிருக்கும் உதயனுக்கு இவ்விருது கிடைத்தது சாலப்பொருத்தமானதாகும். மக்கள் சேவையினை மட்டுமே நோக்கமாகக் கொண்டு உண்மை, நேர்மை, அஞ்சாமை என்னும் இலக்கை நோக்கி பணியாற்றிவரும் உதயன் பத்திரிகை இன்னும் பல விருதுகளைப் பெற்று மக்களுக்குத் தொடர்ந்து பணியாற்ற மனதார வாழ்த்துகின்றேன்.

ப.கிரிதரன், தலைவர்,
யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

## எமது நல்வாழ்த்துக்கள்

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடத்திவரும் இதழியில் துறையில் சிறந்த செயற்பாடுகளுக்கான பத்தாவது விழாவில் இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்ததற்கான அதியுயர் கௌரவ விருது 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கப்பட்டதையிட்டு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது.

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிவரும் 'உதயன்' நிறுவனத்திற்கும் அதன் பிரதம ஆசிரியர் மற்றும் ஊழியர்களுக்கும் இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு வாழ்த்துவதுடன் 'உதயன்' பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்



விருது வழங்கும் விழாவில் பிரதம விருந்தினர் இந்தியாவின் பிரபல்யமான சமூகச் செயற்பாட்டாளர் திருமதி அருணா றோய் விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.



விழாவில் கௌரவிக்கப்பட்ட மூத்த பத்திரிகையாளர்கள் முன்வரிசையில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு மறுவாழ்வு அளிப்பதில் இந்தியாவுக்கு துளியும் அக்கறையில்லை

## குற்றஞ்சாட்டுகிறார் இல.கணேசன்



சென்னை, ஜூலை 16

ஈழத் தமிழருக்கு மறுவாழ்வு அளிப்பதில் இந்திய அரசுக்கு துளியும் அக்கறை இல்லை - என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் இல.கணேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் போர் முடிந்துவிட்டது என அறிவித்துள்ள இலங்கை அரசு, அங்குள்ள தமிழர்களை அகதிகள் முகாம்களில் அடைத்து வைத்துள்ளது. இதனால் சொந்த நாட்டிலேயே அவர்களை அடிமைகள் போல் நடத்தி வருகிறது. அந்த முகாம்களில் தமிழர்களுக்கு அடிப்படைச் சுகாதார வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆடு, மாடுகளை விட அவர்கள் மிகக் கேவலமாக நடத்தப்படுகின்றனர்.

தமிழர்களுக்கு அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் அவர்களுக்கு போய் சேர்ந்தனவா என்பது தெரியவில்லை. அந்த நிவாரணப் பொருள்கள் தமிழர்களுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

அகதிகள் முகாம்களில் நேரடியாக ஆய்வு செய்ய ஐ.நா. சபைப் பணியாளர்களுக்கு அனுமதி வழங்க சிங்கள அரசு மறுத்துவிட்டது. இதனால் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ முடியாது என ஐ.நா. சபையும் பின்வாங்கிவிட்டது

இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக இந்திய அரசு ரூபா 500 கோடியை பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறது என அறிவித்துள்ளது. இது போதுமானதாக இல்லை. இலங்கைத் தமிழரின் நிலையை ஆராயாமல் மேலெழுந்த வாரியாக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது இந்திய அரசின் அக்கறையின்மையையே காட்டுகிறது.

இலங்கை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றி, அவர்களது சொந்தக் கிராமத்தில் குடியமர்த்த வேண்டும். அவர்களுக்கு வேலை உட்பட அனைத்து வசதிகளையும் உடனடியாக செய்து கொடுக்கவேண்டும். இதற்காக இந்திய அரசு, இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

கச்சதீவு அருகே மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்திய அரசு இதில் தலையிட்டு தமிழக மீனவருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் - என்றார்.



பாரிஸில் நேற்றுமுன்தினம் நடந்த பிரான்ஸின் தேசிய தின விழாவில் கௌரவ விருந்தினராக பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டார். விழாவில் பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசியுடன் மன்மோகன் சிங் அமர்ந்திருந்தபோது....

# ஈழத்தில் இன அழிவிற்கு காரணமான இந்தியாவே தமிழினத்தின் முதல் எதிரி

## பொதுவுடைமைக் கட்சி தெரிவிப்பு

ஈழத்தில் இன அழிவிற்கு முழு முதற் காரணமான இந்திய அரசே தமிழினத்தின் முதற்பகை - என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய அரங்கு என்ற பெயரில் திருச்சியில் கடந்த திங்களன்று நடைபெற்ற கருத்தரங்குக்கு கட்சியின் செயற்குழு உறுப்பினர் கி.வெங்கட்ராமன் தலைமை தாங்கிப் பேசும் போதே இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழினத்தின் தேசிய எழுச்சியை ஒரு எழுச்சி நாளாக கடைப்பிடிக்க வேண்டும், கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள ஈழ உணர்வாளர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு குடியுரிமை அளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காலை 9 மணியளவில் தொடங்கிய நிகழ்வில் முதலில் இடம்பெற்ற ஓவியப் புகைப்படக் கண்காட்சியில் ஈழத்தமிழர் படும் அவலங்களை காட்சிப்படுத்தும் படங்கள் அரங்கம் முழுவதும் வைக்கப்பட்டிருந்தன,

இந்நிகழ்விற்குப் பின்னர் ஈழத்தில் தமிழின அழிப்புப் போரில் ஈடுபட்டுள்ள இந்திய - சிங்களக் கூட்டுப் படையினரைக் கண்டித்து இந்திய இலங்கைக் கொடிகளை எரித்து, சிறைக்கு சென்ற தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தோழர்களுக்கு பாராட்டு விழா நடந்தது.

# கடலில் தத்தளித்த ஈழ எழுத்தாளர் உட்பட மூவர் இராமேஸ்வரம் மீனவர்களால் மீட்பு

சென்னை, ஜூலை 16

இராமேஸ்வரம் அருகே கடலில் தத்தளித்த இலங்கைத் தமிழ் எழுத்தாளர் உட்பட 3 பேரை மீனவர்கள் மீட்டனர்.

இதுகுறித்து கூடுதல் டி.ஜி.பி. இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கடந்த 13ஆம் திகதி இராமேஸ்வரம் கடலில் 3 பேர் தத்தளிக்கின்றனர் எனத் தகவல் கிடைத்தது. கடலோரக் காவல் படை, கப்பல் படை, கடலோரப் பாதுகாப்பு குழுமம் ஆகியவற்றுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அப்படைப் பிரிவினர், மீனவர்களுடன் இராமேஸ்வரம் கடற்பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் அருகில் 3 பேர் தத்தளித்து கொண்டிருந்ததை மீனவர்கள் மாலையில் கண்டுபிடித்துக் காப்பாற்றி பத்திரமாகக் கரைக்கு கொண்டுவந்து சேர்த்தனர்.

பொலிஸார் அவர்களிடம் விசாரித்தபோது, அவர்களது பெயர் திருநாவுக்கரசு அருணாச்சலம் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான உதயன் (வயது - 56), சுகந்தன் (வயது - 38), வவுனியாவைச் சேர்ந்த யோகராஜ் (வயது - 38) என்பது தெரியவந்தது.

அவர்கள் மன்னாரில் இருந்து படகில் தமிழ்நாடு வந்தனர் எனவும், இராமேஸ்வரம் அருகில் கடலில் படகோட்டி அவர்களை இறக்கிவிட்டுச் சென்று விட்டார் எனவும், அங்கிருந்து நீந்தி வந்து மேலும் நீந்த முடியாமல் ஐந்தாம் மணல் திட்டில் இருந்தமையும் தெரியவந்தது.

இவர்களில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் திருநாவுக்கரசு என்பவர் பல நூல்களை எழுதியுள்ளமை தெரியவந்தது. விசாரணைக்கு பின்னர் அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் - என்றுள்ளது.

# இராமேஸ்வரம் மீனவர் 21 பேர் நேற்று இலங்கைக் கடற்படையால் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 16

கச்சதீவுக் கடலருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 21 பேர், அவர்களது படகுகளுடன் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட 21 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் நேற்றுமாலை இந்தியக் கடற்படையிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த நான்காம் திகதி ஐந்து விசைப் படகுகளில் கச்சதீவுக் கடலருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 21 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் படகுகளுடன் கைதுசெய்யப்பட்டு, தலைமன்னாருக்குக் கொண்டு வரப்பட்டனர். பின்னர் இவர்கள் 21 பேரும் அனுராதபுரம் சிறையில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இவர்கள் அனைவரும் படகுகளுடன் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

# ஒரிசாவில் மழை வெள்ளத்தால் 20 பேர் மூச்சுத்திணறி மரணம்!

ஒரிசா, ஜூலை 16

ஒரிசாவில் ஒருவாரமாகப் பெய்து வரும் கனமழையால் பல்வேறு மாவட்டங்களில் மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 20 பேர் பலியாகி உள்ளனர். இதுகுறித்த விவரம் வருமாறு -

நயகார் மாவட்டத்தில் திங்கட்கிழமை இரவு பயணிகளுடன் சென்ற பஸ் புரூடாங் ஆற்றில் கவிழ்ந்து விழுந்ததில் 7 பேர் இறந்தனர். 20பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஆற்றில் கவிழ்ந்த பஸ்ஸை மீட்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூபா ஒரு லட்சம் நிவாரணத் தொகையாக அளிக்கப்படும் என அதிகார பூர்வத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கோராபுட் மாவட்டம் திருமதி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் 3 பேர் அடித்துச் செல்லப்பட்டனர் என வருவாய் கட்டுப்பாட்டு அறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கியோன்ஜர் மாவட்டம் ராமியாலா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் மீனவர் ஒருவர் உட்பட 2 பேர் மூழ்கினர்.

கந்தமால் மாவட்டத்தில் ஒரு பள்ளி ஆசிரியர் உட்பட 2 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். கன்ஜாம் மாவட்டத்தில் வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில் 16 வயது இளம்பெண் ஒருவர் உயிரிழந்தார். பஞ்சநகர் பகுதியில் ஒருவர் மழைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்.

இதுவரை 20இற்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் பலியாகியுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கனமழையின் காரணமாக அனைத்து முக்கிய வீதிகளும் மழைநீரால் சூழப்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

புவனேஸ்வரம், நயகார் மற்றும் ராயகடா மாவட்டங்களின் வீதி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தஞ்சை, புதுவை மீனவர்களின் வேலைநிறுத்தம் நேற்று வாபஸ்

பட்டுக்கோட்டை, ஜூலை 16

மீன்வளத்துறை அமைச்சரின் தலையீட்டால் தஞ்சை, புதுவை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. இதையடுத்து நேற்று மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் வடக்கு பகுதி மீனவர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மானிய டீசல் அளவை அதிகரிக்க வேண்டும், இலங்கை இராணுவத்திடம் இருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 5 நாள்களுக்கு முன்பு வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

இந்நிலையில் போராட்டம் குறித்து விவாதிக்க மீனவர்கள் சங்க கூட்டம் நேற்றுமுன்தினம் பட்டுகோட்டையில் நடந்தது.

கூட்டத்தில் தமிழக மீன்வளத்துறை அமைச்சர் சுரேஷ்ராஜன், கோரிக்கையை நிறைவேற்ற முயற்சிக்கிறேன். போராட்டத்தை வாபஸ் பெறுங்கள் எனக் கேட்டுக் கொண்டதையடுத்து வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறுவது என முடிவு செய்யப்பட்டது. இதனையடுத்து நேற்று காலை தஞ்சை, புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் கடலுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

# ஒரே நேரத்தில் இரு கைகளாலும் எழுதும் பெண் பொறியியலாளர்

திருச்சி, ஜூலை 16

திருச்சியைச் சேர்ந்த பெண் கணினி பொறியியலாளர் ஒரே நேரத்தில் இரு கைகளாலும் ஒரே வாக்கியங்களை எழுதிச் சாதனை படைத்து வருகிறார். இவர் தமிழ் உட்பட 4 மொழிகளில் இரு கைகளாலும் எழுதுகிறார்.



திருச்சியைச் சேர்ந்தவர் ஆர்.வைஷ்ணவி. இவர் சமீபத்தில் கணினி விஞ்ஞானப் பாடப் பிரிவைப் படித்து முடித்துள்ளார். இவர் ஒரே நேரத்தில் இரு கைகளாலும் எழுதும் திறமையைப் பெற்றுள்ளார். வலது கையால் எல்லோரையும் போல் எழுதுகிறார்.

வலது கையால் எழுதும் வார்த்தைகளையே ஒரே சமயத்தில் இடது கையாலும் எழுதுகிறார். ஆனால் இடது கை எழுத்துகள், எழுத்துகளை கண்ணாடியில் பார்த்தால் எப்படித் தெரியுமோ, அப்படித் தெரிகிறது.

தமிழில் மட்டுமின்றி, ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய 4 மொழிகளிலும் ஒரே நேரத்தில் இரு கைகளாலும் அவர் எழுதுகிறார். கரும்பலகையாக இருந்தாலும், நோட்டுப் புத்தகமாக இருந்தாலும் அவரால் இப்படி எழுத முடிகிறது.

வலது கையை மட்டும் பயன்படுத்தி எழுதும் போது வேகமாக எழுதுகிறார். இடது கையால் எழுதும்போது, குறைந்த வேகத்தில் தான் எழுதுகிறார். ஒரே நேரத்தில் இரு கைகளாலும் எழுதும்போது, அவரது வேகம் மேலும் குறைந்து விடுகிறது.

வைஷ்ணவிக்கு தொடக்கப்பாடசாலையில் படிக்கும்போதே இந்தத் திறமை வந்து விட்டது. அப்போது அவருக்கு அது வேடிக்கையாகத் தெரிந்தது.

அப்போது அவர் இடது கைப் பழக்கம் கொண்டவராக இருந்தார். பின்னர் ஆசிரியர்களின் வழிகாட்டுதலால் அவர் வலது கை பழக்கம் கொண்டவராக மாறினார்.

வைஷ்ணவியின் திறமையை உணர்ந்த அவரது நலன் விரும்பிகள், யாராவது பெரிய மனிதர் முன்னிலையில் இந்தச் சாதனையை நிகழ்த்தி கின்னஸ் புத்தகத்திலோ அல்லது லிம்கா சாதனை புத்தகத்திலோ இடம்பெற முயற்சி செய்யுமாறு அவரை வற்புறுத்தி வருகிறார்கள்.

ஆனால், வைஷ்ணவிக்கோ இது பெரிய சாதனையாகத் தெரியவில்லை. இதே திறமை எத்தனையோ பேருக்கு இருக்க வாய்ப்புள்ளது என அவர் அடக்கத்துடன் கூறுகிறார்.

# பாலாற்றில் ஆந்திர அரசு அணை: மத்திய அரசு தலையிடவேண்டும்

## கருணாநிதி வேண்டுகோள்



சென்னை, ஜூலை 16

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டும் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

பாலாறு பல மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற நதியாகும். 1892இல் பல மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தொகுப்பு இணைப்பில் பாலாறு நதி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் நீர்த் தேக்கம் கட்டுவது தொடர்பாக தமிழகத்தை அணுகி முன் அனுமதியைப் பெற வேண்டும். நீர்த்தேக்கம் அமைப்பது குறித்து தமிழகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பாலாற்றின் குறுக்கே கணேசபுரம் என்ற இடத்தில் அணை கட்டப் போவதாக செய்திகள் வந்தன. இதுதொடர்பாக, மத்திய அரசுடனும், ஆந்திர அரசுடனும் தொடர்பு கொண்ட போது, பதில் ஏதும் வரவில்லை.

இதைத் தொடர்ந்து, 2006 பெப்ரவரி 10இல் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே எந்த அணையையும் கட்ட இயலாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதையும் மீறி பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் நடவடிக்கையை ஆந்திர அரசு தொடருமேயானால் அதை சட்ட ரீதியாக எதிர் கொள்வோம். எனவே, மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தக்க முடிவு காண வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லை உற்சவ காலத்தில் ஊடரங்கு முழுமையாக நீக்கம்; சட்டம் ஒழுங்கைப்பேண பொலிஸாரின் 24 மணி நேர சேவை

## நேற்றைய கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை ஒட்டி ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்படவிருக்கிறது.

ஆலயச் சூழலில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்காக 24 மணி நேரமும் பொலிஸார் பணியில் ஈடுபடவிருக்கின்றனர்.

நல்லை உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வற்காக நேற்று கூட்டப்பட்ட கூட்டத்தில் இத்தகவல்கள் தெரிவிக்கப் பட்டன.

நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந் திருவிழாவை ஒட்டிய ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக விசேட கூட்டம் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

* வழமைபோன்று மின்சார விநியோகங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
* சுகாதார, குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் வழமைபோல் மேற்கொள்ளப்படும்.
* 13 இடங்களில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்படும். வீதித் தடைகளில் அந்தந்த வீதிகளில் குடியிருப்பவர்கள் பற்றிய விவரங்களை நன்கு தெரிந்து வைத்திருக்கும் தொண்டர்கள் சேவையில் ஈடுபடுவார்கள். துவிச்சக்கர வண்டிகளுக்கான 'பாஸ்' வழங்கும் நடவடிக்கைகளில் தவறுகள் இடம்பெறாத வகையில் கவனிக்கப்படும். ஆலயச் சூழலில் வாகனங்களின் நடமாட்டம் தடைசெய்யப்படும்.
* மக்களிடம் இருந்து கோரிக்கைகள் வரும் பட்சத்தில் அவர்களுக்கான சேவையை எந்த நேரமும் வழங்கத் தயாரான நிலையில் செண்.ஜோன் அம்புலன்ஸ் சேவையும் இடம்பெறும்.
* பொலிஸார் 6 வீதித்தடைகளிலும் கடமையில் ஈடுபடுவார்கள்.
* வர்த்தகர்கள் தமது நிலையங்களுக்கான பொருள்களை பகல் 12 மணிக்கும் பி.ப. 2 மணிக்கும் இடையில் வாகனங்களில் எடுத்துவரமுடியும். குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அதற்கான அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
* ஆலயச் சூழலில் 12 தண்ணீர் தொட்டிகள் மக்களின் குடிதண்ணீர்த் தேவைகளுக்காக வைக்கப்படும்.

உற்சவ ஏற்பாடுகள் குறித்து ஆராயும் விசேடகூட்டம் எதிர்வரும் 23ஆம்திகதி நடைபெறும் என மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (1-111)

# தேசிய வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் இன்று யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை16

குடாநாட்டில் வர்த்தக மற்றும் கடற்றொழில், விவசாய நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் இலங்கை தேசிய வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

இந்தக் குழுவினருடனான யாழ்.வர்த்தகர்களின் சந்திப்பு இன்று காலை 9.30 மணிக்கு வணிகர் கழக அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சகல வர்த்தகர்களையும் ஆர்வம் உள்ளவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# அமைச்சர் கமகே தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்று விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை16

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மற்றும் தொழில் நுட்பக்கல்வி அமைச்சர் பியசேன கமகே யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

நேற்றுமுற்பகல் 11.30 மணிக்கு கல்லூரிக்கு விஜயம் செய்த அமைச்சர், உப அதிபர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

கல்லூரியை சுற்றிப் பார்வையிட்டு பௌதிக வளங்கள் குறித்து ஆராய்ந்தனர். (1-9)

# நியூஸிலாந்து அருகே பூகம்பம்; அதனால் ஆழிப்பேரலைப் பீதி!

கொழும்பு, ஜூலை 16

நியூஸிலாந்தை நேற்று 7.8 ரிச்டர் அளவு பூகம்பம் தாக்கியதைத் தொடர்ந்து, பசுபிக் சமுத்திரத்தின் சில பகுதிகளில் ஆழிப்பேரலை ஏற்படலாம் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், பின்னர் அந்த எச்சரிக்கை வாபஸ் பெறப் பட்டது.

நியூஸிலாந்தில் தென் மேற்குப் பகுதியின் கரையோரத்தில் இருந்து நூறு மைல் தொலைவில், 33 கிலோ மீற்றர் கடலாழத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிராந்தியத்தில் ஆழிப்பேரலை எச்சரிக்கையை பசுபிக் ஆழிப்பேரலை எச்சரிக்கை நிலையம் முதலில் விடுத்தது.

இவ்வாறான பாரிய பூகம்பம் காரணமாக பேரழிவை ஏற்படுத்தும் ஆழிப்பேரலை ஒரு சில நிமிடங்களிலோ அல்லது சில மணித்தியாலங்களிலோ ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டது. எனினும், சில மணி நேரத்தின் பின்னர் அது வாபஸ் பெறப்பட்டது. என்றாலும் அப்பகுதியில் ஆழிப்பேரலை பற்றிய பீதி தொடர்ந்தது.

பூகம்பம் காரணமாக நியூஸிலாந்தில் மக்கள் வீடுகளிலிருந்து வெளியே ஓடினர். மின்சார, தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன எனவும் தகவல்கள் வெளியாகின.

# ஸ்கந்தாவில் இருந்து 22 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இருந்து இம்முறை 22 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் வெளியிடப்பட்ட இசற்ஸ்கோர் புள்ளிகளின் படி கலைத்துறையில் இருந்து 18 மாணவர்களும், விஞ்ஞானத்துறையில் இருந்து 4 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களைத் தண்டிக்கும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை

## தெளிவுபடுத்துகிறார் ஊடக அமைச்சர்

கொழும்பு, ஜூலை 16

ஊடகவியலாளர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்துத் தண்டிக்கும் எவ்வித நோக்கமும் அரசுக்கு இல்லை என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தகவல்களை அறிந்துகொள்வதற்கு மக்களுக்குரிய சுதந்திரமான வழிகளுக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் அரசு ஊடகவியலாளர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து தண்டிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக்க தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்திருந்த கூற்றை அரசு முற்றாக மறுக்கிறது.

இது தொடர்பான எந்தவொரு சட்ட மூலத்தைக் கொண்டுவரும் உத்தேசமும் அரசுக்கு இல்லை. குறைந்தபட்சமாக இது தொடர்பான பேச்சு ஒன்றையோ அல்லது கலந்துரையாடல் ஒன்றையோ அரசு நடத்தவில்லை.

நாட்டில் யுத்த நடவடிக்கைகள் இடம்பெற்ற போது ஜனாதிபதிக்கும் ஊடகங்களின் தலைமை உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் யுத்த செய்திகளை நியாயமான முறையில் பிரசுரிக்க வேண்டுமென மட்டும் வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

### பாதிக்கும் நடவடிக்கை எடுக்கக் கருத்தியதில்லை

அதைத்தவிர ஊடகங்களைப் பாதிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை. அத்துடன் ஊடகங்களைப் பாதிக்கும் வகையிலான கட்டளைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கும் அரசு ஒருபோதும் கருதியதில்லை.

அரச வரி அறவிடுவது தொடர்பாக சிலர் குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்கின்றனர். அவ்வாறு குற்றச்சாட்டு தெரிவிக்கின்றவர்கள், வரி அறவிடாத நிலையில் எந்த ஒரு அரசும் செயற்பட முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களுக்கான நிவாரணங்களையும் மானியங்களையும் அரசு தொடர்ந்து வழங்கி வருகின்றது. அத்துடன் அவற்றின் அளவையும் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

மூன்று வகையான திட்டங்களை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அதில் ஒன்று தொழில் வாய்ப்பு வழங்குவது. தொடர்ந்து தொழில் வாய்ப்புகளை அரசு வழங்கி வருகின்றது. ஆசிரியர் நியமனங்கள் மட்டும் 31 ஆயிரத்துக்கு மேல் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து - மக்களுக்கான நிவாரணங்களும் மானியங்களுமாகும். தேயிலையின் விலை 35 ரூபாவில் இருந்து 70 ரூபாவாக அதிகரித்த போதும் உரத்துக்கான மானியம் குறைக்கப்படவில்லை. அவ்வாறான மானியங்கள் தொடர்ந்து வழங்கப்படுவதுடன் சில நிவாரணங்கள் அதிகரிக்கப் பட்டுமுள்ளன.

மூன்றாவது - அபிவிருத்திப் பணிகள். நாட்டில் யுத்த சூழ்நிலை ஏற்பட்ட போதும் அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து அவை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன - என்றார் அவர். (சி)



படைத்தலைமையில் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து புதிய முப்படைத் தளபதிகளாகப் பொறுப்பேற்றுள்ளவர்களும், முப்படைச் சிரேஷ்ட அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகாவும், பொலிஸ் மா அதிபரும் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் காணப்படுகின்றனர்.

# சிலாபத்தில் கடுங்காற்றினால் 110 வீடுகள் நேற்றுச் சேதம்!

கொழும்பு, ஜூலை 16

சிலாபத்தில் நேற்றுக்காலை வீசிய கடும் காற்றுக்காரணமாக 110 வீடுகள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கடும் காற்றினால் சிலாபத்திலுள்ள 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பாதிக்கப்பட்டன என்று புத்தள மாவட்ட சிரேஷ்ட முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இணைப்பதிகாரி கேணல் மனோஜ் முத்நாயக்க தெரிவித்தார்.

இதன்போது ஏற்பட்ட சேதவிவரங்களைக் கண்காணிப்பதற்காக அங்கு கண்காணிப்புக்குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது நிலவும் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் மரங்கள் சரிந்து விழும் நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மிக அவதானத்துடன் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் தென்மேல் பருவக்காற்று காலநிலை காரணமாக மத்திய மலைநாட்டின் மேற்குப் பிராந்தியத்தில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கூட்டமைப்பின் பிரசாரம் வவுனியாவில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 16

வவுனியா நகரசபைத் தேர்தலுக்கான தனது முதற்கட்டப் பிரசாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், விநோனோதராதலிங்கம் மற்றும் 15 வேட்பாளர்கள் நேற்று வவுனியாவில் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்டனர் என கூட்டமைப்பின் எம்.பி. அரியநேத்திரன் தெரிவித்தார்.

நேற்று முதற்கட்டமாகத் தமது பிரசாரப் பணியை கூட்டமைப்பினர் வவுனியாவில் உள்ள அரச திணைக்களங்கள், அரச [illegible] அவர் கூறினார்.


# ஊசிக்கால் விற்பனைக்கு

அருள்மிகு வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான சுற்றுக் கொட்டகையின் ஊசிக்கால் 8"x4" கனங் கொண்டதும் 16 அடி நீளமும் 5 ¾ அடி உயரமுமான நல்ல நிலையில் உள்ள 30 பாலைமர ஊசிக்கால்கள் விற்பனைக்கு உண்டு. முன்னுரிமையில் கொடுக்கப்படும்.

தொடர்பு:

வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை ,
T.P. - 021 226 3399

ஆலய நிர்வாகம்.


# மரண அறிவித்தல்

## பற்றிமா ஜீவமேரி



தோலகட்டி, வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட பற்றிமா ஜீவமேரி நேற்று (15.07.2009) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் ஞானமுத்து - மாக்கிறேட் தம்பதியரின் பாசமிகு மகளும் யோகநேசராசாவின் அன்பு மனைவியும் ஜெயக்குமார், அமலமேரி, செல்வமேரி,செல்வக்குமார், சந்திரகுமார், வசந்தமேரி, ரட்ணமேரி ஆகியோரின் சகோதரியும் டிலானி, கனிஸ்ரன், நிதர்சன், கிளைக்சன், டாவின்ரன் ஆகியோரின் அன்புத் தாயும் ரஞ்சா, மனோகரன், பேணாட், விமலா, ஜசியானா, நோவேட் அலெக்ஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் வவுனியாவில் நடைபெறும். இவரின் இளைப்பாற்றிற்காக இன்று (16.07.2009) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண முதலமைச்சருடன் பிரிட்டிஷ் தூதுவர் கலந்துரையாடல்

திருகோணமலை, ஜூலை 16

கிழக்கு மாகாணத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கால்நடை, விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் தாங்கள் கிழக்கு மாகாண அரசுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாகக் கிழக்கு மாகாண முதலமைச்சருடன் இலங்கைக்கான பிரிட்டனின் தூதர் பீட்டர் ஹெய்ஸ் நேற்றுக் கலந்துரையாடியுள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை திருகோணமலையில் சந்தித்து உரையாடிய அவர் திருகோணமலை மாவட்டத்தில் தற்போது மாற்றங்கள் காணப்படுகின்றன என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

# ஐ.தே.கவிலிருந்து ராஜிதவை நீக்குவதற்கு எதிராகத் தடை!

## கொழும்பு மாவட்ட நீதிமன்று இடைக்கால உத்தரவு

கொழும்பு, ஜூலை 16

களுத்துறை மாவட்ட எம்.பியும் அமைச்சருமான ராஜித சேனாரத்னவை ஐ.தே.கட்சியிலிருந்து நீக்கி, அக்கட்சி நடவடிக்கை எடுப்பதற்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விடுத்தது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு ஒன்றை பரிசீலனைக்கு ஏற்றுக்கொண்ட பின்னர் எதிர்வரும் 19ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கக்கூடியதாக மேற்படி இடைக்கால உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிபதி சம்பத் விஜேரத்ன நேற்று வழங்கினார்.

தம்மை ஐ.தே. கட்சியில் இருந்தும் அதன்மூலம் எம்.பி. பதவியில் இருந்தும் வெளியேற்றுவதற்குக் கட்சி எடுத்த நடவடிக்கை ஐ.தே.கட்சியின் யாப்புக்குள், உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய தீர்ப்புக்கும், இலங்கை நீதிக்கும் முரணானது என இந்த மனுவில் விஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா ஆகியோர் உட்பட தொண்ணூறு பேர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் அணிசேரா நாடுகள் அமைப்பின் 15 ஆவது மாநாட்டில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் ஆற்றிய நீண்ட உரையின் சில அம்சங்கள் வருமாறு:-

உலகிலேயே மிகப் பெரும் பலம் வாய்ந்த பயங்கரவாத அமைப்பை எமது மண்ணில் தோற்கடித்துள்ளோம். தற்போது சகல பகுதிகளும் எமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

அவர்களின் பிடியில் இருந்து மீட்கப்பட்ட 287,000 பொதுமக்களை மீள் குடியேற்றும் சவாலை எதிர் கொண்டு நிற்கிறோம். மீளவும் அவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம். மீள் குடியமர்வுடன் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இதுவரை இந்தப் பணிக்கு உதவிய ஐ.நா. உட்படஏனைய நாடுகளுக்கு நன்றி கூறுகிறோம்.

எமது நாட்டு மக்களும் எமது சர்வதேச நண்பர்களும் வழங்கும் உதவியுடன் அந்த மக்களை விரைவில் மீள் குடியமர்த்தி விடுவோம் என்று நாம் நம்புகிறோம் -என்றார். (அ-சி)

## இறுதிநேரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெனிக்பாம் முகாமில் உள்ள 150 கட்டில்கள்கொண்ட வைத்தியசாலையில் இரண்டு சத்திர சிகிச்சை அறைகள் உள்ளன.

இங்கு மே மாதத்திற்குப் பின்னர் சேர்க்கப்பட்ட 600 பேரில் பெரும்பாலானவர்கள் ஐந்து வயதிற்கு உட்பட்டவர்கள்.

இந்த வைத்தியசாலையில்300 சத்திர சிகிச்சைகளுக்கு மேல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் அதிகளவானவை யுத்த காயங்கள் தொடர்பானவை. வெடிகுண்டு, துப்பாக்கி சன்னங்களை அகற்றுவதற்காகவே இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வவுனியா வைத்தியசாலையில்**

வவுனியாவில் உள்ள வைத்தியசாலையில் 4 ஆயிரம் சத்திர சிகிச்சைகள் யுத்த காயங்களுக்கானவை.

இலங்கைச் சுகாதார அமைச்சுடன் இணைந்து வவுனியாவில் செயற்படும் எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு கடந்த ஐந்து மாதங்களில் 5 ஆயிரம் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது. அநேகமானவை மோதல் காயங்கள் தொடர்பானவை.

மோதல் முடிவடைந்து ஏழு வாரங்களுக்குப் பின்னர் மிகக் குறைந்தளவு நோயாளிகளே வைத்தியசாலைக்கு வருகின்றனர். எனினும், வைத்தியசாலையில் உள்ள வசதிகள் குறைவாகவுள்ளன.

450 கட்டில்களைக் கொண்ட வைத்தியசாலையில் ஆயிரத்து 200 நோயாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுக்குசத்திரசிகிச்சை மற்றும் அதன் பின்னரான பராமரிப்பு போன்றனவே ஜூன் மாதத்தில் அதிகளவு இடம்பெற்றன. (அ-சி)

## இடம்பெயர்ந்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருபது லட்சம் பவுண்ட்ஸ் நிதியுதவியின் ஒரு பகுதியாக முப்பது லட்சம் பவுண்ட்ஸ் வழங்குவது குறித்த உறுதிமொழியையும் அவர் வழங்கியுள்ளார்.

பிரிட்டனின் சர்வதேச் அபிவிருத்தித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சமீபத்தைய மோதல் காரணமாகத் தமது வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள 2லட்சத்து84 ஆயிரம் இலங்கையர்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்கு பிரிட்டன் முன்வந்துள்ளது.

மோதல்களிலிருந்து மீளும் முதற்கட்டத்திற்கு உதவுவதற்கும், இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளுக்குத் திரும்புவதற்குத் தயாராவதற்கு உதவுவதற்கும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மைக் பொஸ்டர் முப்பது லட்சம் ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ்களை ஒதுக்கீடு செய்துள்ளார்.

முகாமில் நிலைமைகள் முன்னேற்றமடைகின்றன. எனினும் அடிப்படைமட்டத்திலேயே அவை உள்ளன.

மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளமையால் மனிதாபிமான அமைப்புகளால் அவசர வைத்திய, சுகாதார சேவைகளையும் உணவையும் வழங்க முடிகின்றது.

எனினும், பெருமளவு போஷாக்கின்மை, அளவுக்கதிகமாக மக்கள் ஒரே இடத்தில் வாழ்தல், சுத்தமான குடிதண்ணீருக்கான போதிய வாய்ப்புகள் இல்லாதமை, சுகாதார வசதிகளின்மை போன்ற பிரச்சினைகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

முகாம்களில் உள்ள மக்களுக்கு நடமாட்ட சுதந்திரம் இன்னமும் வழங்கப்படவில்லை.

பொதுமக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பும் நிலை உருவாகும்போது பிரிட்டனின் உதவி இந்த மக்களுக்கு விநியோகம், போக்குவரத்து மற்றும் அவசர தங்குமிடங்கள் போன்றவற்றை வழங்கவும், முகாமிலிருந்து வீடு திரும்பும் மக்களுக்கு அடிப்படை சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் வழி செய்யும் - என்று கூறினார். (அ-சி)

## மாவையில் நாளை கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

வரலாற்றுப்பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்று வரும் காம்யோற்சவத்தில் நாளை வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 7.30க்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்று ஒரு மணிக்கு ஷண்முகார்ச்சனை நடைபெறும். தொடர்ந்து கார்த்திகைக் குமரன் வீதி வலம் வந்து அருள்காட்சி அளிப்பார்.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (1)

## ஏ-9 வீதியூடாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தா ஏ-9 வீதியூடாக வவுனியா சென்று இப்போது தங்கியிருக்கிறார்.

ஏ-9 பாதை ஊடாக பயணிகள் சொகுசு பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன. ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு பேசியதன் பயனாக விசேட ஏற்பாடாக இந்தச் சேவை ஆரம்பிக்கப்படுகிறது என்று அமைச்சர் கூறினார்.

முதலில் ஐந்து பஸ்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து இங்கிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு திரும்பும். இந்தச் சேவை வாரத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகள்நடைபெறும்.

ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்படும் இச்சேவை காலக்கிரமத்தில் மேலும் விரிவுபடுத்தப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சேவையில் பயணம் மேற்கொள்பவர்கள் பதிவுகளை எவ்வாறு எங்கு மேற்கொள்வது என்பது தொடர்பான விவரங்கள் ஒரிரு தினங்களில்அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஜனநாயகத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகர சபை மற்றும் யாழ். மாநகர சபைக்கான ஐ.தே.கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்ற வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், யாழ். மாநகர சபைக்கான ஐக்கிய தேசிய கட்சியின் முதன்மை வேட்பாளர் ஏ.ஏ.சத்தியேந்திரா தேர்தல் விஞ்ஞாபனத்தை எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளித்தார்.

இதன் பின்னர், கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டவை வருமாறு:-

வட பகுதி மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவே நாம் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தோம்.

பல ஆயுதக் குழுக்களால் நாம் மிரட்டப்பட்ட போதிலும் மக்களின் நன்மைக்காக நாம் தொடர்ந்தும் செயற்படுவோம்.

அரசு அந்தப் பகுதியில் ஜனநாயகத்தையும், இயல்பு வாழ்க்கையையும் ஏற்படுத்தத் தவறிவிட்டது.

வட பகுதி மக்களின் ஜனநாயகம், உரிமை, அப்பகுதியின் அபிவிருத்தி மற்றும் சமத்துவம் தொடர்பாகவே எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கவனம் செலுத்தியுள்ளோம்.

இன ஒருமைப்பாட்டு ஜனநாயகத்தை ஏற்படுத்தவே யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றோம்.

மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சக்தி, ஐ.தே.கட்சிக்கே உள்ளது. அனைவரும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் நாம் சிந்திக்கின்றோம்.

யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. அரசின் செயற்பாடுகள் இதற்கு நேர்மாறானதாகவுள்ளன.

அகதிமுகாம்களில் சொல்லொண்ணாத் துயரம் நிலவுகின்றது. கூண்டுகளுக்குள் அடைக்கப்பட்ட அவர்களது வாழ்வு அவலம் நிறைந்ததாகவுள்ளது.

அவர்களது உடனடித் தேவையாக மீள் குடியேற்றமே உள்ளது. இந்த மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

கிழக்கிலும், வடக்கிலும் ஜனநாயக அரசை நிலைநாட்டவே நாங்கள் செயற்படுகின்றோம்-என்றார். (அ-சி)

## தமிழர் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுகளையே அது ஏற்படுத்தப் போகின்றது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க எச்சரித்திருக்கிறார்.

தீர்வுத் திட்டம் பிற்போடப்பட்டு வருகின்ற காரணத்தினாலேயே அந்நிய சக்திகள் எமது உள் வீட்டுப் பிரச்சினைகளுக்குள் தலையிடுகின்றன. வன்னி மக்களின் நிலைமைகள் குறித்து கருணாநிதியோ அல்லது அவரது மகள் கனிமொழியோ கவலைப்படத் தேவையில்லை என்றும் அவர் சொன்னார்.

ஜே.வி.பி. கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பயங்கரவாதமும் பிரிவினைவாதமும் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் சகோதரத்துவம் மற்றும் ஐக்கியத்துடனான இலங்கையை கட்டியெழுப்புவதே சகல இனத்தவரதும் எதிர்பார்ப்பாகும்.

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக, நாம் எதிர்கொண்டுள்ள தேசியப் பிரச்சினையாக தோற்றம் பெற்றுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை சரியானதும் தீர்க்கமானதுமான வழியில் புரிந்து, அதற்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதுமே இன்றைய முதற்கட்டப் பணியாக இருக்க வேண்டும்.

இது சவால் மிக்கதாகும். இந்த சவால் மிக்க பணியை முன்னெடுப்பதற் கான வேலைத்திட்டம் அல்லது ஒழுங்கமைப்பு அரசிடம் இல்லை.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக தற்போது அரசு அதனைக் குழப்பியடித்துக் கொண்டிருக்கின்றது. இனங்களுக்கிடையிலான சமத்துவமின்மையை துடைத்தெறிவதற்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்களையேனும் முன்னெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது- என்றார். (அ-சி)

## சீனா, பாகிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனைக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் முடிவுக்கு வந்திருப்பதால் சீனாவிடம் இருந்தும் பாகிஸ்தானிடம் இருந்தும் 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இராணுவத் தளபாடங்கள், வெடிபொருள்களுக்காகக் கொடுத்திருந்த கொள்வனவுக் கட்டளையை நாம் இரத்துச் செய்து விட்டோம்.

போர் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த போதே இந்த வெடிபொருள் களுக்கான தேவை இருந்தது இப்போது போர் முடிவுக்கு வந்துவிட்டதால் அதற்கான தேவை இல்லாமல் போய்விட்டது - என்றார் அவர்.

துணை இராணுவக் குழுக்களில் பணிபுரிந்த சுமார் 800 பேர் தற்போது இராணுவத்தில் இணைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-1-07)

## வடக்கில் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத வகையில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் நிலவுகிறது என மாகாணசபை உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அங்கு அவ்வாறான அச்சுறுத்தல் எதுவும் இல்லை. அவ்வாறு அச்சுறுத்தல்கள் இருந்தால் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும் இது வரைஎவ்விதமுறைப்பாடும்செய்யப்படவில்லை.

வடக்கின் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு வாய்ந்த ஒருவராக ஐக்கிய தேசியக் கட்சி, டாக்டர் ஜயலத் ஜயவர்தனவை நியமித்துள்ளது. அவரிடம் ஆயுதக் குழுக்களின் இடையூறுகள் பற்றி விசாரித்த போது முறைப்பாடுகள் எதுவும் இல்லை என்றே அவர் தெரிவிக்கின்றார். எனவே ஆயுதக்குழுக்களினால் தடை ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை என்பது புலனாகின்றது - என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

கருத்தரங்கு
இந்து நாகரிகம்
திரு.ஜெயக்குமார்
* எதிர்பார்க்கை வினாக்களும் விடைக்குறிப்புக்களும்
* வெளி மாணவருக்கும் அனுமதி
* இன்று முதல் பதிவுகள்
* விவரங்கள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகாமை)

கருத்தரங்கு
தமிழ்
திரு.குழந்தை
* எதிர்பார்க்கை வினாக்களும் விடைக்குறிப்புக்களும்
* வெளி மாணவரும் பங்குபற்றலாம்
* இன்று முதல் பதிவுகள்
* விவரங்கள் யூனிவேர்சலில்
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகாமை)

SHAMROCK
ஏச்சமோட்டை, யாழ்.
சிங்களம்
(புதிய பிரிவு) ஆரம்பம் 17/07 Fri - 5 p.m.
Mr.B.Ranjan
ENGLISH PAPER
(O/L. திருப்ப எடுப்பவர்களுக்கு)
Sun - 8, Tue - 5
A.T.Muthu

Personal Class (கணனி)
Ms office, D.T.P, Web Design, Internet E-mail ஆகிய கற்கை நெறிகள் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பித்துத்தரப்படும்.
NOTE - கணணி இல்லாதவர்களிற்கு எனது "Laptop" மூலமாக பயிற்சியளிக்கப்படும்.
0779672088 நல்லூர்.

வெளிவந்துவிட்டது
(Speed Marketing)
2009 A/L - வணிகக்கல்வி
ஜகத் பண்டாரநாயக்கா (அ.சிவனேசராஜா)
* முதலாம் பாகம் - அலகு 1 - 5
* பாகம் 1 - 1 - அலகு 6,7,8
* பாகம் 2 - 1 - அலகு 1 - 5
* பாகம் 2 - 2 - அலகு 6,7,8
அன்னை புத்தகசாலை
இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org